போன் நெ. 13. விலை 2 அணா. Regd. No. [illegible]

திராவிடநாடு

மலர் 13 | 12—12—54 | இதழ் 24

அந்த நிலை வந்தால்?

[இசையமுது]

"சட்ட விரோதம்" சபைத் தலைவர் கூறினார்.

"அனுமதிக்க மாட்டோம் — அவைக்கு அவக்கேடு அளிக்கும் இச் செயலை" — அனல் தெறிக்க உரைத்தனர் ஆளும் கட்சியினர்.

"சரிதம் காணாத நிகழ்ச்சி — ஏனப்பா வீண் பிடிவாதம்" — வேண்டுதலும் அறிவுரையும் அளித்தனர் எதிர்க்கட்சித் தோழர்கள்.

"ஆண்டவனுக்கு விரோதமானது—அடாது இச் செயல்"— என்றனர் ஆத்திகவாதிகள்.

"சட்ட விரோதமாயிருக்கலாம்— சரிதம் காணாத நிகழ்ச்சியாகவும் இருக்கலாம். அதனாலேயே இச் செயல் தவறுடையது என்று என்னால் ஒப்புக்கொள்ள முடியாது. அறியாமைக்கு அடிபணிய மாட்டேன் — அறிவு — அடக்குமுறையால் தகர்க்கப்படுவதை என்னால் கண்டுகொண்டிருக்க முடியாது. மனித முன்னேற்றத்தை விரும்புகிறேன். அதற்கான மார்க்கம் எது எனினும்மேற்கொள்ளத் தயங்கேன். அறிவு-ஆம் அதுதான் என் உயிர் —என் இன்பம். அறிவுலகத்தைக் காணவே ஆசைப்படுகிறேன். அறிவற்ற எந்த நிகழ்ச்சியையும்-எதையும்—என்னால் ஒப்புக்கொள்ள முடியாது, பின்பற்றத் தயாராக இல்லை. வண்ணக் கண்ணாடியோடு பார்க்க வேண்டாம் என்னை—உங்கள் எண்ணத்தைச் சீராக்கி — பிறகு என் செயலை ஆராயுங்கள்—அப்போது தெரியும் — அது அவசியமானதென்பது.. எனக்குத் தெரிகிறது உங்கள் உள்ளம் என்ன சொல்கிறதுஎன்பது. அதுஎன் காதுகளிலேயும் கேட்கத்தான் செய்கிறது.

"ஆமாம் — சரிதானே — அவன் சொல்வதிலும் உண்மை இருக்கத்தான் செய்கிறது"

"எப்போதோ ஏற்பட்டபழக்கம்— அதுஇன்றைக்குப் பொருந்துமா— அவசியமா என்பதுபற்றி எண்ண வேண்டாமா" என்று கேட்கிறேன். நியாயம்தானே."நல்லபழக்கம்என்கிறீர்களே-அந்தவழக்கத்திற்கு அடிபணிந்துஅதைச்செய்தது-கொடுங்கோலர்களான மன்னர்கள்—மந்திரிகள்—மன்ற உறுப்பினர் எவ்வளவு பேர்—அறியீரா? என்று கேட்கிறான்.

சபைத் தலைவர் மறுத்தார் — ஆளும் கட்சியினர் வெறுத்தனர். உடன் நின்ற தோழர்களோ ஒதுங்கிநின்றனர். நேசக் கரம் நீட்ட வேண்டியவர்கள் — நேற்று வரை பாசத்தோடு பழகியவர்கள்— பயனற்றது உன் செயல் என்றனர்.

ஆனால், அவனோ அவைத் தலைவரைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஆளும் கட்சியின் வெறுப்பைப் பொருட்படுத்தவில்லை. உடன் நின்ற மற்றத் தோழர்களின் உபதேசம் —அவனுக்குக் கோபமூட்டவில்லை — ஆனால் பரிதாபப் பார்வையை அவர்கள்பால் செலுத்தினான்.

"சிறு நிகழ்ச்சியாக உங்களுக்குத் தோன்றலாம் தேவையற்றதாக நீங்கள் உணரலாம். ஆனால் அறியாமைக்குச் சிறிதும் தலைவணங்கமாட்டேன். என் உடலில் உள்ள ஒவ்வொரு துளி இரத்தமும் அறியாமையை எதிர்த்துத்தான் போரிடும் — அவை அழியும் வரை." "மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டேன்—மக்கள் மன்றம் என் மீது நம்பிக்கை வைத்து என்னை இங்கு அனுப்பியது. நான் அவர்களிடம் நம்பிக்கை வைக்கிறேன். செயல் மூலம் என் நம்பிக்கையை—அதற்கானவற்றை—செய்து காட்டுவேன் —அப்படியிருக்க அந்தப் புத்தகத்தைக்கொண்டு என் நம்பிக்கையை- அதற்கான உறுதி மொழியை — நான் அவர்களுக்கு எப்படிக் கொடுக்க முடியும்."

மக்கள் சபை—பாராளுமன்றம்— அவனைப் பணியவைக்கமுயன்றது— கட்டாயப்படுத்தியது. சட்டத்தைக் காட்டியது. சம்பிரதாயத்தைப் பற்றி அவன் தோழர்கள் கூறினார். இது செய்யா விட்டால்—பதவி— கிடைக்காது. போப்பாண்டவர் கோபித்துக்கொள்வார் — அவர் கோபமென்றால் ஐரோப்பாவிலே மட்டுமல்ல—அகில உலகத்திலும் வாழ முடியாது. மீளா நரகம் கிடைக்கும். பலப்பல கூறினர். எல்லாவற்றையும் கேட்ட அவன்— புன்னகை ஒன்றை வீசிப் பின் 'முடியாது. என்னால் அப்படிச் செய்ய' என்றான்.

பாராளுமன்றம் — பொதுத்தேர்தல் முடிந்தபின் நடக்கும் முதற்

கூட்டம். அதிலே 'விசுவாசப்பிரமாணம் — நம்பிக்கை மொழி'— கூறும் கட்டம்.

அந்தக் கட்டத்திலே நடைபெற்ற காட்சி, மேலே தீட்டப்பட்டிருப்பது. எங்கே? இங்கிலாந்திலே!

“மக்கள் முன்னேற்றமே என் குறிக்கோள்”—இப்படி அவன் கூறுரைத்ததோடு நிற்கவில்லை. செயலாற்றினான்.

அந்த நாடே திகைத்தது — அவன் செயல் கண்டு. அரசன் மருண்டான். பாராளுமன்றம் சீறியது. உடன் நின்ற தோழர்கள் தோள்கொடுக்க மறுத்தனர்—ஓரிருவர் தவிர. மதத்தலைவர் மருட்டினார். மடாலயம் கண்டனக் கணைகளை ஏவியது. இடையிடையே அவனுக்கு வாழ்த்துக்களும் வந்தன. “அறிவுக்கு தொண்டுசெய்யும் நண்பனே — தம்பீ!—உன் செயலை நான் ஆதரிக்கிறேன்— அதற்காக அகமகிழ்கிறேன்” கடல் கடந்து இருந்த அறிஞர் ஒருவர் அனுப்பிய ஆசி இது.

இகழ்ச்சியைக் கண்டு அவன் இதயம் சோர்ந்துபோகவில்லை. புகழ் கண்டு ஓய்ந்திருக்கவும் இல்லை.

சூரியன் மறையாத சாம்ராஜ்யம்—அதன் தலைநகர்—அரசியலில் ஒரு படி முன்னேறி நின்று உலகத்தினரைப் பார்க்கும் அரசியல் தலைவர்கள் நிறைந்த பூமி — இரத்தம் சிந்தாத புரட்சியால் — முன்னேற்றத்திற்கு பாதைவகுத்துக் கொண்டவர்கள் — அறிவுக்கதிர்களான— நியூடன், ஷா போன்றாரைப் பெற்ற மண்—உலகத்திலே மன்னர் கூட்டங்கள் ஒழிக்கப்பட்டுக்கொண்டு வரும் இந்த நாளில்—பயனில்லா நிலையில் மன்னன் ஒருவனைவைத்துக்கொண்டு—அவன் மணிமகுடம் — நிலைக்க — பொற்காசுகளைப் பனித்தூளாகச் செலவிடும் பண்புபெற்ற நாடு.

அமைதியாக ஓடும் தேம்ஸ்—அதன் கரையிலே வானளாவ எழுந்து நிற்கும் மன்றம்—மக்கள் குரல் ஒலிக்கும் கூடாரம்—தோழர்களே! அங்குதான் அந்த அறிவுப் போராட்டம் நடந்தது.

இங்கிலாந்திலே — அதன் தலைநகரான லண்டன்மாநகரில்—தேர்ந்தெடுக்கப்பட்ட புது உறுப்பினர் நிறைந்திருந்த மக்ககள் மன்றம்.

அந்த பாராளுமன்றத்திலேதான் 'விஸ்வாசப் பிரமாணம் எடுத்தனர் பலரும்—ஆனால் அவன் மறுத்தான்—அந்த முறையையே ஒழிக்க வேண்டும் என்றான்—“நார்த்தம்டன்” தொகுதியில் இருந்து மக்களால் மகிழ்ச்சியோடு அனுப்பப்பட்டவன். அவன்தான் மறுத்தான்—உலகத்திலே உள்ள கிருத்தவர்கள்—தினம் தினம் புரட்டும் நூல் — உலகெங்கும், ஞாயிறு காலை — ஒருமனமாக்கும் நூல்—பாபிலோனியாவில் பிறந்த 'ஏசு' அளித்தார் என்று கூறும் நூல் — அந்தத் தேவக்குமாரன் அளித்த நூலைத்தான் கையில் எடுத்து உறுபபினர் பலரும்—ஏன்மன்னனேகூட விஸ்வாச பிரமாணம் கூறினார்கள் — ஆனால் அவன் மறுத்தான்.

அந்த நூல் புனிதமாயிற்றே, அறவழி கூறும் நூலாயிற்றே—உன்னை ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தை காட்டு—என்று கூறுகிற அளவு சாந்த உணர்ச்சி தரும் நூலாயிற்றே — அமெரிக்காவிலே—ஏன்—அகில உலகத்திலும்—அதிகப்படியான, பிரதிகள்விற்கும் அந்த நூலை எடுத்தா பிரமாணம் செய்ய மறுத்தான் — கேட்பர் தோழர்கள். இதைத்தான் கேட்டனர்—எங்கும். ஆனால் அவன் மறுத்தான் — புத்தகத்திற்கு அடிமையாகாதே—புனிதம் என்ற வார்த்தைக்காக, அடிபணிந்து விடாதே — உன் அறிவிற்கு பொருந்துகிறதா, அந்தச்செயல்— அவன் சொன்னது இதுதான்.

சென்றகாலத்தில்வாழ்ந்தவர்கள், தங்கள் சிந்தனைகளில் பட்டதைக் கொண்டு சேர்த்துக்கட்டிய சிறைச்சாலை அது — அதிலே உரிமை இருக்காது — உண்மையும் கிடையாது. ஆகவே அதைக்கொண்டு— உங்களைப்போலநானும்அந்தச்செயலைச் செய்யமுடியாது. நான் செய்யாததுபற்றி மகிழ்கிறேன் — நீங்கள் செய்ததைக்கண்டு வருந்துகிறேன், பரவாயில்லை; இன்று இல்லாவிட்டாலும் என்றாவது என் வழியில் நீங்களும் வரத்தான் போகிறீர்கள், என்று சொல்மாரி பொழிந்தான்.

நாத்திகன் என்றனர், அவன் சிரித்தான். நாங்கள் உன் உரிமையை பறித்துக் கொள்வோம் என்றனர்—மீண்டும் சிரித்தான்.

மன்றம் அவன் உரிமையை—உறுப்பினர் என்ற உரிமையை—மன்றத்தில் பேசும் உரிமையை—பறித்துக் கொண்டது.

“ஐயோ, எவ்வளவு செலவு செய்தேன், என் தேர்தல் செல்லாதாமே, என்று இதயம் வெதும்பும் நம் சட்டசபை உறுப்பினர்; எங்கு நமக்கு பதவி போய்விடுமோ என்று ஏங்கி நிற்கும் நமது நண்பர்கள், என் கட்சியின் குறிக்கோளே அமைச்சர் பதவிதான், அதற்காக எதையும் செய்வோம் என்று கூறும் மாணிக்கங்கள் இதுகேட்டுத் துடிக்கலாம். முட்டாள் வாழத்தெரியாதவன், கிடைத்ததை இப்படி பிடிவாதத்தால் இழப்பதா......என்று கேட்பர். ஆனால் அவனோ ஆயாசப்படவில்லை, கொல்லைப்புறவழிகளும், குள்ளநரிக் கொள்கைகளும் மேற்கொள்ளவில்லை. மீண்டும் தேர்தலுக்கு நின்றான்—அதே தொகுதி முன்பைவிட—வெற்றியின் கரம் இப்போது ஓங்கியிருந்தது. “இன்னும் எத்தனை முறை வேண்டுமானாலும் உன் உரிமையைப் பறிக்கட்டும்— அதற்காக அஞ்சாதே, இந்தத் தொகுதியல்ல—எந்தத் தொகுதியிலே நீ நின்றாலும், கரம் கொடுப்போம்” என்று கூறுவதுபோல மக்கள் ஆர்வத்தின் குரல் ஒலிக்க அதற்கிடையே மீண்டும், பாராளுமன்றம் நுழைந்தான்! மீண்டும்—அதே நிலை......

மன்றத்தில் இருக்கவே தகுதியற்றவனாக மதிக்கப்பட்டான்.

பொதுமக்கள் அவனை உள்ளே அனுப்பினர் — அதே பொதுமக்களின் பிரதிநிதிகள் பாராளுமன்றம் அவனை வெளியே அனுப்பியது. சட்டத்தின் பெயரால்.

உணர்ச்சி குன்றவில்லை; உரமேறிய அவன் தோள்கள் குறுகிடவில்லை. அவன் நிமிர்ந்து நின்றான், மீண்டும் தேர்தல். அதே தொகுதி முன்னிரு தடவைகளைக் காட்டிலும் இப்போது வெற்றிக் குரல் உரக்க ஒலித்தது.

மகத்தான வெற்றி — மக்கள் அவனை உற்சாகத்துடன் அனுப்பினர்—இந்த முறையும் முன்போல் அதிகாரத்தின் ஆணவப் போக்கை அனுமதிக்க மாட்டோம் — என்ற நிலையில் ஆர்வத்தோடு வழி அனுப்பினர்.

பாராளும்மன்றம் — அவனைக் கண்டு திகைத்தது. மன்னன் நடுங்கினான். உறுப்பினர் பலர் — இப்போது புத்துணர்ச்சி பெற்றனர். ஆர்வத்தோடுஅவனைப் பார்த்தனர்! புன் முறுவல் வீச அவன் நின்றான். பேச்சுக்கள் தொடர்ந்தன... முடிவில் வெற்றி பெற்றான்.

ஆணவமும் அதிகாரமும் அவன் அடி பணிந்தது. சட்டத்தையும் சம்பிரதாயத்தையும் தகர்த்தெறிந்தான். மிரட்டிய ரோமாபுரி வேறு வழி இன்றி வெறுப்போடு பார்த்தது. தோழர்கள் போற்றினர்; பாராளுமன்றத்தின் வெளியில்' இருந்து 'வாழ்க பிராட்லா' வாழ்க என்ற ஒலி கிளம்பி வானை முட்டியது. பாராளுமன்ற மூலை முடுக்கெல்லாம் எதிர் ஒலித்தது.

பிராட்லா—அந்த வீரனின் பெயர் தான். சார்லஸ்பிராட்லா இங்கிலாந்தில் 1832ல்பிறந்தவன். அறிவுலகச் சிற்பியாக வாழ்ந்தான். அறியாமையை போக்க-மூட நம்பிக்கையை முறியடிக்க—எழுத்துக்களைப் பயன்படுத்தினான்—அவன் நாவன்மை—மனிதத்தன்மையற்றசெயலை—மடைமையைத் தாக்கும் ஈட்டியாக இருந்தது. எழுத்திற்கும் பேச்சிற்கும் தடை. ரோமாபுரியிலும் மன்னரம் அரண்மனையிலும் திகில்.

மூன்று முறை தேர்ந்தெடுக்கப்டான் — மகத்தான ஆதரவுடன். இருமுறை அதிகாரம் வெளியில் அனுப்பியது. பைபிளைத் தொட மாட்டேன், அதைக் கொண்டு விசுவாசப்பிரமாணம் எடுக்கமாட்டேன் என்றான். வேதம் புரட்டுவோர், வேசிகளைப்போல பத்திரிக்கை நடத்துவோர், சமயம் பார்த்து —சந்தர்ப்பம் தேடும் சுயநலவாதிகள் — அவனை இகழ்ந்தனர். அறிவுலகம் அவனை பாராட்டியது. அரசாங்கம் அவனை எதிர்க்க முடியவில்லை. வெற்றிக்கு சொந்தக்காரனானான். சட்டத்தை தளர்த்தியது—சம்பிரதாயத்தை மறந்தது. முடிவாக வெற்றி பெற்றான் அவன். ஆண்டவனை அழைக்காது, அவன் துணை தேடாது, பைபிளைக் கொண்டு பிரமாணம் எடுக்காது அவன் உறுப்பினன் ஆனான்.

மனித அறிவுவரலாற்றிலே ஓர் பொன்னேடு அச் செயல் — பத்தொன்பதாம் நூற்றாண்டிலே வாழ்ந்த பிராட்லா வழி வகுத்தான். இருபதில் வாழும் தோழர்கள் இங்கு என்ன செய்கிறார்கள்?

திராவிடத்தின் தூதுவர்கள் பிராட்லாவாக ஆகா விடினும் தமிழ்ப் பற்றுக்காரணமாக குறளைக் கொண்டுதான் பிரமாணம் எடுப்பேன் என்று கூறினால் — அந்த நிலை வந்தால்......? என்று எழும் அந்தநிலை......,

★

பொதுவுடமை நாட்டுத் தலைவர்களைப்பற்றி!

[மார்கன் பிலிப்ஸ்]

எங்கேனும் ஒருநாட்டிற்குவிஜயம் செய்யும்போது மிகவும் சுவாரஸ்யமாக இருக்கும் நிகழ்ச்சி ஒன்று இருக்குமானால் அது அந்த நாட்டு மக்களை வழிநடத்திச் செல்லும் தலைவர்களைச் சந்திப்பதேயாகும்

நாங்கள் மாலங்கோவிற்கு அறிமுகப்படுத்தப்பட்டோம், அவரும் அவரது சகாக்களும் ஒரு அழகிய தோட்டத்தில் இருந்தனர். அங்கிருந்து சோவியத் யூனியனைப் பார்ப்பதற்கு மிகமிகக் கவர்ச்சியாக இருக்கும். அவ்வளவு குள்ளமாக மாலங்கோவ் இருப்பார் என்பதை அப்போதுதான் நான் கண்டேன்.

அவரது நிழல்படத்தைப் பார்த்தால் கனசரீரமுள்ள பெரிய உருவமுடையவர் என்று நினைக்கும்படி இருக்கும். உண்மையில் கட்டுமஸ்தாக இருக்கிறார், ரஷ்யாவில் எல்லாமே அப்படித்தான். பெரிய சர்வகலாசாலை, பெரிய விவசாயக் கண்காட்சி, சோவியத் தலைவர்களின் பெரிய படங்கள், சோவியத்தில் எல்லாம் மிகப் பெரிதாகவே இருக்கின்றன.

சிமிட்டும் கண்கள், அவுட்டுச் சிரிப்பு, வியக்கும் நகைச்சுவை, கூர்த்தமதி, சமுதாயத்துக்கேற்ற பல குண விசேஷங்கள் இவற்றை ஒருங்கே பெற்றவர் மாலங்கோவ்.

அவர் லேசான லினன் உடை தரித்திருந்தார்.

*

அடுத்தபடியாக மேற்கத்திய நாடுகளுக்கு நன்கு அறிமுகமான மாலட்டோவ் வந்தார். அவர் தமது நடைபாவனைக்கேற்ற உடை அணிந்திருந்தார். சோவியத் அரசுரிமை வாரிசுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் எதுவும் மாலட்டோவ் விஷயத்தில் எவ்வித மாற்றத்தையும் உண்டாக்கவில்லை, அவர் இன்னும் சோவியத் சர்க்காருக்கு ஒரு நம்பிக்கையுள்ள நல்ல ராஜதந்திரியாகவே இருந்து வருகிறார் 33-ஆண்டுகளுக்கு முன் தமது கட்சியிடம் கொண்டிருந்தது போலவே அவர் இன்றும் நம்பிக்கையுடன் நடந்துகொள்கிறார். என்றாலும் சமீபத்தில் அவருக்குக் கொஞ்சம் கவலை ஏற்பட்டிருக்கிறது. பல ஆண்டுகளாக வெளிநாட்டு மந்திரியாக இருந்த அவர் சொன்னதை, மற்ற கம்யூனிஸ்டு நாடுகள் எல்லாம் வேதவாக்காக மதித்து வந்தன. அவர் வார்த்தைக்கு அவை மறு வார்த்தை கூறுவதில்லை.

சமீபத்தில் நடந்த ஜினிவா மகாநாட்டில் அந்த நிலைமை மாறிவிட்டது. சீனப்பிரதமரும், வெளிநாட்டு மந்திரியுமான சூ–என்–லாய் உலக ராஜதந்திர அரங்கில் பிரதான பாத்திரமாகத் தலையெடுத்துள்ளார்.

ரஷ்யாவின் கூட்டாளியாக இருந்தபோதிலும் சீனா அதற்குக் கட்டுப்பட்ட நாடல்லவென்பது அப்போது நிதர்சனமாகிவிட்டது. யுகோஸ்லேவியா கம்யூனிஸ்டுக் குழுவிலிருந்து வெளியேறிய பிறகு இப்படி ஏற்பட்டது இதுதான் முதல்தடவை. இதனால் ஐரோப்பாவில் சோவியத் கொள்கையில் மாறுதல் ஏற்படவும் செய்யலாம்.

*

மாலட்டோவுக்குப் பிறகு சோவியத் கம்யூனிஸ்டு கட்சியின் முதல் காரியதரிசியான குருஸ்செவ்வை சந்தித்தேன். மாலட்டோவுக்கு முற்றிலும் மாறுபட்டவர் இவர். கட்சியைக் கட்டிக் காப்பதில் கண்ணும் கருத்தும் உள்ளவர். கட்சிதான் அவருக்கு சர்வமும். இதயமற்ற இயந்திரம் போன்ற அவர் அவசியமானபோது அவ்வாறே நடந்து கொள்ளகிறார். தற்போதைய விவசாய உற்பத்திப் பெருக்கத்தில் முழுக் கவனத்தையும் செலுத்தியுள்ளார்.

. கட்சியிடம் முழு விசுவாசத்துடன் நடக்கும்படி வற்புறுத்துவதில் கொஞ்சமும் சளைக்காதவர். சோவியத் யூனியன் கருத்தை உலகிலுள்ள மற்ற கம்யூனிஸ்டு கட்சி

கள் எல்லாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதுதான் விசுவாசம் என்பதற்கு அவர் கொண்டுள்ள அர்த்தமாகும்.

இவர்கள்தான் சோவியத் யூனியனில் ஒரு சக்தி வாய்ந்த கோஷ்டியின் தலைவர்கள். இவர்களிடத்தில் சகஜமானதோழமை நிலவுகிறது.

*

செஞ்சீனாவின் தலைவரான மா-சே-துங் மே தினம், விடுதலை தினம் தவிர இதர நாட்களில் அடிக்கடி வெளியில் காட்சியளிப்பது துர்லபம். இதனால் அவரது உடல் நலத்தைப்பற்றி பல வதந்திகள் உலவுவதுண்டு.

கடந்த சில ஆண்டுகளில் அவர் பல முறை இறந்து விட்டார் என்றும், நோய்வாய்ப்பட்டுள்ளார் என்றும் வதந்திகள் இருந்து வந்தன. நான் அவரை நேரில் பார்த்த பிறகு உடல் நலத்துடன், நல்ல திடமாகவும் இருந்து வருகிறார் என்பதை உறுதியாகச் சொல்ல முடியும்.

கட்டுமஸ்தான இவர் நாட்டுப்புற வாசியைப்போல மெதுவாகப் பேசுகிறார். தமதுசொந்த மாகாணத்தில் குடியானவர் சங்கங்கள் அமைத்து தமது புரட்சி வாழ்க்கையைத் துவங்கினார். மா சே துங் நிலத்தைக் கைப்பற்ற ஏற்பாடு செய்து குடியானவர்களை ஆயுத பாணிகளாக்கினார். ரஷ்யாவில் செய்தமாதிரி கூட்டுப் பண்ணைகளை சைனாவில் அமைப்பது முடியாதென்பதைச் சூட்சமமாக உணர்ந்தார். மார்க்ஸியத்தைப் பயன்படுத்திக் கொண்டாலும் தமக்குச்சிறந்ததெனத் தோன்றும் வழியைப் பின்பற்றும் நெஞ்சுரம் வாய்ந்தவர்.

மாஸ்கோவில் பயிற்சி பெற்ற புரட்சிக்காரர் அல்லர் இவர். ஆரம்பகாலத்தில் சியாங் - கே - ஷேக்கை விட்டுப் பிரிந்து போனதும் அவரது காரியங்களைக் கம்யூனிஸ்டுகளே பழித்தனர். அவரை நிராகரித்து பதவியிலிருந்து ஒதுக்கி வைத்திருந்தனர் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

*

மா-சே-துங் கியாங்ஸி ஜில்லாவில் கம்யூனிஸ்டு சர்க்காரையும், ஒரு கொரில்லாப் படையையும் ஸ்தாபித்தபோது அவருக்கு உதவியாக இருந்தவர் தற்போது சீன மக்கள் குடியரசின் உபதலைவரும் சேனாதிபதியுமான சூ-டே ஆவார்.

இவ் விருவரும் தங்கள் மலைப்பிரதேசத் தளத்திலிருந்து கொண்டே தங்கள் அதிகாரத்தையும், செல்வாக்கையும் வியாபிக்கச் செய்தனர், அவர்களின் வெற்றியைக்கட்சியேஅங்கிகரிக்க வேண்டியதாகி விட்டது. இறுதியில் சியாங்கிடமிருந்து சைனா முழுவதையுமே பிடித்துக் கொண்டார்கள்.

கிழக்குஐரோப்பாவில் (சோவியத்) செஞ்சேனை புரட்சியை உண்டாக்கியது. சைனாவிலோ புரட்சி கம்யூனிஸ்டு தன்மையும், தேசிய நோக்கும் பெற்றிருந்தது. மாவும், அவரது சகாக்களும் தாங்களாகவே எதையும் தீர்மானிப்பவர்கள். மா-சே-துங் மற்ற கம்யூனிஸ்டு நாடுகளுடன் சேர்ந்து வாழ்வார். ஆனால் ஒரு போதும் சர்வதேச கம்யூனிஸ்டு ஸ்தாபனங்களுக்கு அடிபணிய மாட்டார்.

*

சோ-என்-லாய் சர்வதேச அரங்கில் நன்றாகப் பிரபல மடைந்த ராஜதந்திரி. முதன் மந்திரியாகவும், வெளிநாட்டு மந்திரியாகவும் இருக்கிறார். ஜினிவா மாநாட்டின் மூலமாக அரசியல் வானில் ஒளி பெற்றவர். இவரை நான் ஜினிவாவில் சந்தித்தேன். சுவாரஸ்யமாகப் பேசுபவர். 1913ம் ஆண்டிலிருந்தே சார்லி சாப்ளின் 'விசிறி'யாக இருந்து வருகிறார். பேச்சு வார்த்தைகள் நடத்துவதில் கெட்டிக்காரர். பொறுமைசாலி. பொது மேடையைவிட மகாநாட்டையும் தனிப்பட்ட முறையில் பேசுவதையும் விரும்புபவர்.

விஷயத்தைச் சீக்கிரம் புரிந்துகொள்ளும் இவர் மற்ற கம்யூனிஸ்டு தலைவர்களைப் போலன்றி உடனே தமது முடிவையும் கூறிவிடுவார். விளம்பரத்தின் மதிப்பை நன்கறிந்துள்ள இவர், பத்திரிகைக்காரர்களுக்கும், சர்வகட்சித் தூது கோஷ்டிகளுக்கும் நாட்டைத் திறந்துவிட ரொம்பவும் தயாராக இருப்பதாய்த் தோன்றுகிறது.

*

சைனாவின் மர்ம மனிதன் ஒருவர் உண்டென்றால் அது கம்யூனிஸ்டு கட்சியின் உப தலைவரான லியுசால்-சிதான். இவர் மற்ற அரசியல் தத்துவங்களைச் சகிக்காத கம்யூனிஸ்டுக் கொள்கைப் பித்தர். நாங்கள் அவரைப் பார்க்கவேண்டுமென்று நினைக்கவில்லை. ஆனால் மா-சே-துங்கைச் சந்தித்தபோது அவரும் கூடவிருந்தார். அடுத்த நாள் வெளியான பட்டியலில் மாவுக்கு அடுத்தபடியாக அவர் பெயர் தானிருந்தது அடுத்தபடி தான் சோ-என்-லாய். லியூ ஒரு பிறவிப் புரட்சிக்காரர்போலக் காணப்பட்டார். புரட்சி முடிந்து விடுவதில் மகிழ்ச்சியடையாதவர் என்றுகூடக் கூறலாம். கட்சி இயங்குவதற்குப் பொறுப்பாளி என்ற முறையில் மிகவும் சக்தி வாய்ந்தவர். எதிர்காலத்தில் அவரைப் பற்றி அடிக்கடி கேள்விப்பட நேரிடலாம். (த—முரசு)

★

தனிக் கருணை!

"அன்றொரு நாள் தான் எவ்வாறு ஆண்டவனின் தனிக் கருணைக்கு ஆளானார் என்பது குறித்து ஒருவர் என்னிடம் கூறிக்கொண்டு வந்தார். ஒரு நாள் அவர் வெளிநாட்டிற்குக் கடற்பயணம் செய்ய இருந்தார். ஆனால் யாது காரணத்தாலோ பயணம் தடைப்பட்டு விட்டது. ஆண்டவனின் "தனிக் கருணையால்" அவர் போகாது நின்றதே நல்லது ஆயிற்று. ஏன்? அந்த கப்பல் கடலில் மூழ்கிவிட்டது.

அதிலிருந்த ஐநூறு பேரும் மாண்டனர்.

ஐநூறு பேர்களோடு மூழ்கிய கப்பலில் செல்லா வண்ணம் ஆண்டவனின் தனிக் கருணையால் ஒருவன் காப்பாற்றப் பட்டான்.

ஆனால் இந்த ஐநூறு பேர்கள்?

அதிலிருந்த தாய்மார்கள்?

அவர்களின்கள்ளங்கபடமற்ற மழலை பேசும் இளங் குழவிகள்?

அவற்றின் அருமைத் தந்தையர்?

அக்கரையில், என்று கப்பல் வந்தடையும், என் இனிய துணைவர் என்று வருவார், என்று ஆவலே உருவாய் நிற்கும் இளம் பெண்கள்?

இவர்களின் கதி?

இதன் பெயர்தான், ஆண்டவனின் தனிக்கருணையென்பது!!

—இங்கர்சால்

தொடர் சித்திரம்

கடிகாரம்

5

[அண்ணல்]

முன்னுரை முடிந்தது

தேன் குடிக்கச் சென்றவனுக்குத் தேள் கொட்டினுல் எப்படியிருக்கும்? மான் வேட்டையாடச் சென்று புலிக் காட்டிலே சிக்கிக்கொண்டால், சொல்ல முடியுமா அந்த வேதனையை. அப்படியாயிற்று, என்னுடைய நிலை. கடிகாரத்தின் ரகசியத்தை அறியச் சென்று, வேதனைக் கூட்டில் அல்லவா, சிக்கிக் கொண்டேன்? இருக்கின்ற இடமோ, ஜெயில்! எதிரே, மயக்கமாகிக் கிடக்கிருன், பைத்யம்! கூண்டுக்குள் நிற்கும் வள்ளியோ, "சாமி! உயிருக்கு ஒண்ணும் ஆபத்து இல்லீங்களே? ஆபத்து இல்லிங்களே?" என்று கூவுகிருள். தாலிப் பிச்சை தரவேண்டுமாம், நான்! தன் கழுத்திலே கிடப்பதைக் காட்டிச் சொல்லுகிருள்!! "வெளியே வந்ததும் என் உடம்பை, உங்களுக்குச் செருப்பாவேணும்னுலும் தைச்சுப் போடறேன், சாமி! அவரை எப்படியாவது காப்பாத்துங்க!! எனக்குத் தாலி பிச்சை கொடுங்க!!!"—என்று, கதறுகிருள், அவள். அவளைக் கேள்வி கேட்கக் கூடிய நேரமா! தேள்கொட்டியது மட்டுமல்ல, பாம்பு ஒன்றும் பக்கத்திலிருந்து கடித்ததுபோலிருந்தது வள்ளியின் கவலையைக் கண்டபோது. எப்படியோ பைத்யத்தை எடுத்துக் கொண்டு, வீட்டுக்கு வந்தேன்!! வைத்தியச் செலவு வேறு எனக்கு. பைத்யமோ, நாள் பூராவும் உளறிக் கொண்டேயிருந்தான் — "பாவி! பழிகாரி! பத்ரகாளி!! ஒரே வெட்டு-துண்டு. துண்டாக்குகிறேன் பார், உன்னை" என்று வரதனின் காலில் விழுந்து மன்னிப்பு கேட்கவேண்டுமென்று என்னைக் கெஞ்சினனே அந்தப் பைத்யம்தான் இப்படிக் கூவுகிருன்! அவன் போட்ட கூச்சலைக்கண்ட டாக்டர்கூட மிரண்டார்!! எவ்வளவு சாது என்று எண்ணினேன் அன்று. அந்தச் சாது இன்று சங்கநாதம் அல்லவோ, செய்கிறது!!

வள்ளியோ, 'தாலிப் பிச்சை' கேட்கிருள். நான், என்ன எமதர்மனு! அல்லது அவள்தான் சாவித்திரியா!! சத்யவான், வரதனு அல்லது இந்தப் பைத்யமா? வரதனும் வள்ளியும் குடித்தனம் நடத்தும் கோலாகலம் அந்தத் தெருவுக்கே பிரசித்தம்! உதாரணத்துக்குக் கூடச் சொல்வார்கள் — "பெண்ணென்ருலும் பெண் அப்படியல்லவா இருக்கவேண்டும்? எவ்வளவு சாந்தம் அவளிடம் எப்படி காலம் தள்ளுகிறது பார்த்தாயா!!" என்பதாக. தீயில்பட்ட துரும்புகூட சில விநாடிகளில், கருகி விடும்! வள்ளியோ, தீயில்பட்டும், கருகாத மலர்போல, சித்ரவதை அனுபவித்து வந்திருக்கிருள் இதுவரை!! ஊருக்குத் தெரியும், வள்ளி, வரதனுடைய மனைவியென்பது. ஆனால், வள்ளி, பைத்யத்தைக் காட்டியல்லவோ, தாலிப் பிச்சைக் கேட்கிருள் என்னை! வரதன்! 'வாகனம்' ஏறி 'ஜோடிப்புடன்' பவனிவரக் கிளம்பி விட்டால், அவன் போதையின் அளவு எவ்வளவு என்பதை, வள்ளியின் உடம்பிலே விழுந்த அடிகளைக் கணக்கிட்டால் தெரிந்துகொள்ளலாம்! மிரளாத பசு! துவளாத கிளி! பேசாத பதுமை! கூவாத குயில்! என்றெல்லாம் வர்ணிக்கலாம், அவளை. சுருங்கச்சொன்னால், சந்திரமதிகூட பிச்சையெடுக்கவேண்டும் அவளிடம்! அவ்வளவு கொடுமையை அனுபவித்திருக்கிருள், வரதனிடம். இருந்தும், கூட்டைவிட்டுப் பறக்கவில்லை அக்கிளி! பூட்டை உடைத்துக்கொண்டு ஓடவில்லை, அந்தப் பூ!! அவள்தான், பைத்யத்தைக் காட்டி பிச்சை கேட்கிருள்! பைத்யமோ, "வெட்டு ஒன்று! துண்டு இரண்டு!!" என்று சொல்லுகிருன். படுக்கையிலோ, மாஜிஸ்திரேட் மருதவாணர் கிடக்கிருர். கடிகாரமோ, சிங்கார மடத்தைச் சேர்ந்ததாம்! ஹெட்கான்ஸ்டேபிள் சொல்லுகிருர். வரதனோ, "சிறைச்சாலை என்ன செய்யும்?" என்று தெம்மாங்கு பாடுகிருன். எனக்கோ, "எல்லா உயிரும் ஈசன் கோயில், என்று ராமலிங்க அடிகள் பாடியதும், "நானில்லாத இடமேயில்லை! தூணிலும்மிருக்கிறேன், துரும்பிலுமிருக்கிறேன். மாட்டிலும் இருக்கிறேன், மண் ஓட்டிலும் இக்கிறேன். ஆணிலும் இருக்கிறேன். பெண்ணிலுமிருக்கிறேன். அகண்டபரிபூரணன் நான்! அர்ச்சுனு!! நீதான், நான். நான்தான், நீ" என்று கீதையில் படித்ததும், இப்படியெல்லாம் படித்ததால் எனக்கே அடிக்கடி ஏற்படுவதான, எல்லா உயிரும் உடலும் ஈசன் கோயிலாயிருக்கும்போது ஏன் மனித இனத்தில் இந்த அலங்கோலங்கள்? என்கிற சந்தேகமும் அடிக்கடி கூடி உந்தி எழும்பி உள்ளத்தை உதைத்துக்கொண்டிருக்கின்றன... என்ன செய்வது? என் நிலையில் நீங்களிருந்தால் எப்படியிருக்கும் உங்களுக்கு? இரவு முழுமையும் தூங்கவில்லை! என் மனைவியோ, என்மீதிருக்கும் கோபத்தை, பிள்ளைகள்மீது காட்டிடும் கோபம் தெரிகிறது எனக்கு! அம்மாவோ, பைத்யங்களுடன் சேர்ந்து நானும் பைத்யமாகிவிடுவேனு என்று நிமிடத்துக்கொரு முறை என்னைப் பார்ப்பதும் கூடத்திலிருக்கும் குல தெய்வங்களைப் பார்ப்பதுமாக இருக்கிருர்கள்!!

எனக்கே என் மீது கோபம் வந்தது. வட்டிக் கடையுண்டு! நானுண்டு!! —என்றில்லாமல், இந்த வம்பு தும்புகளில் எல்லாம், நான் ஏன் சிக்க வேண்டும்? இதைத்தான் என் மனைவி சொல்லுகிருள்-எரிச்சலுடன்! அம்மாவும் அன்போடு சொல்லுகிருர்கள், என்னிடம்!! உண்மைதான், நமக்கேன் இத்தொல்லை? காலையிலேயே, பைத்யத்தை வெளியே விரட்டிவிட வேண்டும்! உலகத்தில், என்னைவிட சுகமாக வாழும் எத்தனையோபேர், இப்படித்தானு என்னைப் போல உலக ஆராய்ச்சி நடத்துகின்றனர்? தேசம், என்ன, என் வீட்டுச் சொத்தா! அது கருப்பா, சிகப்பா—என்று கூட கவலைப் படாமல் இருக்கவில்லையா, எத்தனையோபேர்? நான் என்ன புத்தனு! சாமான்யன்!! அவன், அரசபோகங்களையெல்லாம் துறந்து சென்றதைப் பற்றி, இன்னும் உலகம் பேசுகிறது—நான் என் வீட்டை விட்டுக் காஷாயம் ஏந்திக் கொஞ்சம் கிளம்பட்டும்! இந்த உலகம் என்ன சொல்லும்? பூமாலையும் பாமாலையுமா கிடைக்கும்! செச்சே—நினைக்கவே, நெஞ்சு கூசுகிறது!! நான் என்ன அன்ன சத்திரமா கட்டி வைத்திருக்கிறேன்-இல்லை!- அனுதை விடுதி கட்டக்கூடிய அளவுக்குத்தான், கோடீஸ்வரனு? — காலையிலேயே, பைத்யத்தை விரட்டி விட்டு, நம்வேலையைக் கவனிப்பதென்கிற முடிவுக்கு வந்தேன்! அவனிடமும், தெரிவித்தேன்!! உடலும் ஓரளவு நலமாகியிருந்தது, அவனுக்கு. அவன் எந்த வித மறுப்பும் கூறவில்லை! ஆனுல்,

---

புதுவையில்!

புதுவை மாவட்டப் பகுதியிலுள்ள ஒவ்வோர் ஊரிலும் தி. மு. கழகத் தோழர்கள் கழகம் அமைக்க வேண்டுகிருேம். 20 பேருக்குக் குறையாமல் உறுப்பினர்களைச் சேர்த்துக்கொண்டு எமக்கு விண்ணப்பித்தால், புதுவை வட்டக் கழகக் கிளையாக ஆங்காங்கே தி. மு. கழகம் அமைக்க ஏற்பாடு செய்வோம். தோழர்கள் முயல்வாராக" என்று ச. சிவப்பிரகாசம், செயலாளர், புதுவைத் தி.மு.க. 191, காந்தி வீதி, புதுச்சேரி, கேட்டுக்கொள்கிருர்.

"இவ்வளவு கஷ்ட நஷ்டங்களையும் ஏன் ஏற்றுக் கொண்டீர்களோ, அந்த விபரத்தைச் சொல்லமட்டும் கொஞ்சம் அனுமதி கொடுங்கள்,'' என்று சொல்லிவிட்டுக் கூறினான், அந்தக் கதையை. அதை, அப்படியே தருகிறேன்—என், நடையில். தீர்ப்பு அளிக்கும்படி உங்களை நான் வேண்டிக் கொள்ளவில்லை. உங்கள் தீர்ப்புகளால் கருகிய மொட்டுக்களைக் காப்பாற்றிவிடவா முடியும்? பணச்சாவி பூட்டினால் ஓடக்கூடிய கடிகாரங்கள் தானே நீங்களும்?

2

"சாலையிலும் சோலையிலும் முகிழ்க்கவில்லை, எங்கள் காதல்! சராசரி குடும்பங்களில் நடப்பது போலத்தான் எனக்கும், நாச்சிக்கும் ஏற்பட்டது. என் பெயர் நல்லான். நாச்சி, துள்ளித் திரியும் புள்ளிமானல்ல! நானும், பள்ளி சென்று புள்ளிக் கணக்கறிந்த புத்திசாலியல்ல!! இருவரும், சராசரி நீங்கள் சந்திக்கும் சாதாரணதுகளின் உலகத்தைச் சேர்ந்தவர்கள்தான். என் கையும் காலுமே, என் பெற்றோர் விட்டுச் சென்ற 'பிதுரார்ஜித' சொத்து! கண்ணீரும் கவலையும் தான் நாச்சியின் பெற்றோர் அவளுக்கு விட்டுச் சென்ற ஆபரணங்கள்!! இரண்டு அனாதைகள்—இருவரும் குடும்பஸ்தர்களானோம். இரண்டே வரியில் இதனைச் சொல்லிவிட்டேன்! ஆனால், நானும் அவளும், குடும்பம் என்கிற பெயரில், ஒரு 'குடிசைக்குள்' வாழ்க்கையைத் துவங்கப்பட்டபாடு இருக்கிறதே, அது கொஞ்சநஞ்சமல்ல. நாச்சியின் அழகைக் கண்டு, எந்த 'வில்லனும்' எனக்கெதிரிடையாக வரவில்லை. இதனால், அழகற்றவள் போலும் என்றெண்ணிடாதீர்கள்! மஞ்சள் பூசிய முகமும், மருதாணை பூசிய கைகளும், என் நெஞ்சத்தை அந்தக் காலத்தில் என்ன பாடு படுத்திற்று தெரியுமா? வெற்றிலை சிவக்க, அவள் இட்லி விற்கும் அழகே — ஒரு அலாதி! தினசரி காலையில் அவள் கடைக்கு ஆஜராகும் முதல் ஆசாமி நான் தான் — கடைசி ஆசாமி கூட நான்தான். அவளுக்கு அப்போது வயது இருபது இருக்கும்! கழுகுகள் நிரம்பிய இந்த உலகத்தில், அந்தக் கிளி, எப்படி சுதந்திரமாய் வாழுகிறது என்பதைச் சோதிக்க பல முயற்சிகள் செய்தேன். பக்கிரி ஒரு நாள், குப்பன் இன்னொரு நாள், ரங்கன் மற்றோர் நாள் — இப்படிப் பலரை அனுப்பிப் பார்த்தேன்! பல்லிளித்துப் பார்க்கும்படியும் சொன்னேன்!! கண்ணீரைக் காட்டியே, அவர்களைத் திருப்பி அனுப்பி விட்டாள் — "அண்ணன்! உங்களுக்கு ஒரு அக்கா, தங்கச்சி இருந்தா இப்படிச் செய்வீங்களா? ஏதோ, என் தலையெழுத்து இப்படியாகி விட்டது. ஊர் உலகம் என் தலையிலே கல்லை ஏற்றிடும்! இப்படியெல்லாம் செய்யாதீங்க!!,'' என்று அவள் வேண்டிக் கொண்டபோது, அழுகையே வந்துவிட்டதாம், என்தோழன் வீரப்பனுக்கு. மானத்தையும் காப்பாற்றிக் கொண்டு, அதோடு வருமானத்துக்கும் வழி செய்தபடி வாழ்ந்த அவளை எப்படியாவது அடையவேண்டுமென எண்ணினேன்!

பெண்களிலே பலரகம் உண்டு. இது ரோஜா! இது மல்லி! இது சாமந்தி! இது அரளி! இது செம்பரத்தை! என்று மலர்களைப் பிரிப்பது போல், பார்த்ததும், இது எந்த ஜாதியைச் சேர்ந்தது என்று சொல்லிவிட முடியாது. சிலது பார்வைக்கு பறத்தையைப் போலிருக்கும். நெருங்கினால், நெருஞ்சி முள்ளாகித்தைக்கும்!! கண்ணுக்கு, கனகாம்பரமாகக் காட்சி தரும் சிலதிடம், முல்லைமணமும் கிடைப்பதுண்டு. பல பெண்கள், மேற்குறிப்பிட்ட மலர்களைப்போல, எல்லாக் குணங்களையும் சேர்த்துப் பிடிக்கப்பட்ட பொம்மைகளாகவும் இருப்பர். ஒவ்வொரு சமயம், ஒவ்வொரு குணம் வெளிப்படும்! இது, சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி ஏற்படும்!! ஆனால், நாச்சி அப்படியல்ல, கூட்டுச்சரக்கு அல்ல! குறையாத மணமுல்ல ரோஜா-மாறாத குணமுள்ள மாது. அதனால்தான், அந்த மலர், பொல்லாதவர்கள் வாழும் இந்த உலகில், கசங்காமலிருக்கிறது என்று அறிந்தேன். அந்த ரோஜாவை அடைய...அப்பப்பா!...... எத்தனை மாதங்கள் தவம் கிடந்தேன், தெரியுமா? கடைசியில் பலித்தது! பலன் பெற்றேன்!! இதற்கு வாய்ப்பாக வந்தது, திடீரென அவளுக்கேற்பட்ட காய்ச்சல்தான். இரவு, பகல் அவள் ஒட்டுக் குடித்தனம் இருந்த ஓலைக் குடிசைக்கு எதிரேயுள்ள இலுப்பை மரத்தடிதான் எனக்குப் பங்களா! அவள் முனகினால்கூட போய் நிற்பேன், கலங்கியபடி!! காய்ச்சல் தணிந்ததும். என்னோடு வர அவள் சம்மதித்தாள். ஆனால், கலியாணம்.........? ஜாதியைப் பற்றியும் சொந்தக்காரர்களைப் பற்றியும் எனக்குக் கவலையில்லை! அவள் நிலையும் அதுதான்!!

ஆனால், ஊர் உலகம் என்ன சொல்லும்? சம்பிரதாயத்துக்காகவாவது தாலி கட்ட வேண்டாமா? நானோ, 'போர்ட்டர்!' ரயில்வே கூலியாள்!! நாளொன்றுக்கு எப்பாடு பட்டாலும் எனக்கு ரூபாய் ஒன்றுக்குமேல் கிட்டாது!! இதை அவளிடம் சொல்லவும், அச்சம். தாலிக்குக்கூட காசில்லாதவனையா, நான் கலியாணம் செய்து கொள்வேன்? என்று சொல்லி விட்டால்.........! அந்தப் பயம், எனக்கு. அதை எப்படியோ அறிந்து கொண்ட அவள், தாலிக்கும் மற்ற செலவுகளுக்குமென்று ரூபாய் பத்து கொடுத்தாள். எப்படியிருக்கும் எனக்கு? ஒரே ஆனந்தம்தான். அது மட்டுமா, இது வரை, இலுப்பை மரத்தடி, இட்லிக்கடை, டீஓட்டல் என்று காலந் தள்ளிய நான், 'குடித்தனம்' துவங்கவும் ஆரம்பச் செலவுகளுக்கும் பணம் கொடுத்தாள். இட்டிலிவிற்று சேமித்த பணமாம், அது. "பணத்தைத் தந்தேன். ஆனால், என் குணத்தைப் பெற்றேன்'', என்று என்னைப் பார்க்கும்போது சொல்வாள். நான் என்ன பரிசு தரமுடியும், அவளுக்கு? 'இச்' ஒலிதான்! அதை, அவள் போதுமென்றாலும், விடு என்றாலும், வரையாது வழங்கத் தவறியது கிடையாது ஒரு நாளும். இப்படி நாங்கள் வாழத் துவங்கியபோதுதான், காதலைக் கண்டேன்.

முன்பெல்லாம் அவளைப்பார்க்கும் போது, அந்த உதட்டுடன் நம் உதடைச் சேர்த்தால்......அவளைக் கட்டியணைத்து ஆலிங்கனம் செய்தால்... இப்படித்தான் ஆசைகள் ஏற்படும் எனக்கு! இப்போதோ, அப்படிப்பட்ட ஆசையல்ல, எனக்கு ஏற்பட்டது!! கண்ணைக் கண் கவ்வுவதே காதல்—என்று, காலேஜ் மாணவர்கள் கருதுகின்றனரல்லவா? அதுவா, காதல்! என் அனுபவத்தில், அது காதல் அல்ல; ஒரு ஆவேச வெறி. கைகூடியதும், கலைந்து போகக் கூடிய கோட்டை. சிறு குழந்தைக்கு அழகுள்ள பொம்மைமீது எப்படி ஆசை உண்டாகிறதோ, அதைப் போலத்தான் இந்தக் காலத்து வாலிபர்களும், இளமைப் பசியில் ஏதாவது ஒன்று 'விளையாட' வேண்டும் என விரும்புகிறார்கள்! அதை, காதல் என்று அழைக்கிறார்கள்!! இப்படித் துவங்கிய, காதல்கள், எத்தனை எத்தனையோ கசப்பாகியிருக்கின்றன. புலியும் எலியும் போலப் போன தம்பதிகளு

"ராமாயணம் வெறும் கட்டுக் கதை; பொய்; ராமன் கடவுள் அல்ல, என்றெல்லாம் எவர் வேண்டுமானாலும் பிரச்சாரம் செய்யலாம். தடை இல்லை........ நம் நாட்டில் தொன்று தொட்டு மதம் சம்பந்தமாக எவ்வளவோ மாறுபட்ட கருத்துக்கள் இருந்து வந்திருக்கின்றன. ஒப்புக் கொண்டவர்கள் சிலர்; ஆட்சேபித்தவர்கள் சிலர். ஆதலால் மதத்தைப் பற்றி வேறுபட்ட கருத்துக்கள் இருப்பதை சர்க்கார் ஆட்சேபிக்கவில்லை."

நிதியமைச்சர்,
9—12—54,
சென்னை சட்ட சபையில்

முண்டு. அந்தக் காதல், ஒரு ஆவேச வெறிதான்! சந்தர்ப்பம் ஏற்பட்டால், எதிர் வீட்டுக்கு எதிர்வீட்டிலும், வகுப்பறைக்குள்ளும், அது மலர்கிறது. பிறகு.........! உலகில், 'லைலாவும் மஜ்னூனும், "தேவதாசும் பார்வதியும்,' 'அமராவதியும் அம்பிகாபதியும்', இலக்கியத்தில்தான் காணமுடியும். அதனைப் படித்துப் பலர், அம்பிகாபதி-அமராவதிகளாக முயல்வதுண்டு! குலோத்துங்கன், முட்டாள் — மகள் அமராவதியின் ஆசைப்படி, பாடிப் பிழைத்த அம்பிகாபதியிடம் அவளை அனுப்பியிருந்தால்— ஆறுமாதத்தில், அமராவதி, அரண்மனைக்கு ஓடி வந்திருப்பாள்! அம்பிகாபதியால், அரண்மனை கட்டித்தர முடியுமா — அம்பாரி வைக்க முடியுமா—தாதிகளை அமர்த்த முடியுமா? பிறகு தெரிந்திருக்கும், "காட்டில் வேண்டாம்—கட்டாந்தரை போதும். வானமே, கூரை! வையமே, வீடு!!, என்று வாழ்ந்து விடுகிறோம்— அப்பா. ஏழையென்பதால், என்னையும் அவரையும் பிரிக்காதீர்கள்?" என்று வசனம் பேசும் அமராவதியின் கதி! அது, ஏன், நமக்கு? வீண் விசாரணை! விட்டுத் தள்ளுங்கள்!!

எனக்கென்னவோ, நாச்சிமீது, ஆரம்பத்தில் 'வெறி'தான் இருந்தது —பிறகோ, 'அவளில்லாவிடில் நானில்லை' என்கிற ஒரு உணர்ச்சி தோன்றிற்று— ரயில்வேஸ்டேஷனில் மூட்டை தூக்கி சம்பாதித்த நேரம் போக மிச்சநேரமெல்லாம் அவளருகிலே நிற்கவேண்டும் போலிருந்தது —இதைத்தான், நான், காதல் என்று நினைத்தேன்! என் சகாக்களிடமும் சொல்லி மகிழ்ந்தேன்!! உயிரும் உடலும் போல பழகினோம், நாங்கள்!

அதனால்தான், அன்று அவளைக் காணவில்லை என்றதும், எனக்குக் கோபம் — ஆத்திரம் — எரிச்சல் எல்லாம் கலந்துவந்து மோதிற்று. அவன் எங்கும் போய்விடவில்லை! சந்தைக்குப் போயிருந்தாள் — இரண்டுமைல் தூரத்தில்தான் திருவாரூர்—ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமையன்று அங்கு போய், வீட்டுக்கு வேண்டிய பொருள்களை வாங்கிக்கொண்டு திரும்புவாள்! போகும்பொழுது கூட, ஸ்டேஷனுக்கு வந்து என்னிடம் சொல்லிவிட்டுத்தான் போனாள்!! ஆனாலும், பாழும் நெஞ்சு கேட்கிறதா? தஞ்சாவூருக்குப் போகும் ஐந்தரை மணி வண்டி கூடப் போய்விட்டது! நானோ, குடிசையிலிருந்தபடியே, கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் பார்க்கிறேன்! யார் யாரோ வருகிறார்கள்–ஆனால், அவளை மட்டும் காணோம். எங்கே போயிருப்பாள்?

"ஒருவேளை, டவுனிலுள்ள ஆசாமிகள் யாராவது......?"

"செச் சே! நாச்சியிடமா, செல்லும்?"

"ஏமாற்றி அழைத்துப்போய்......'

நினைக்கும்போது நெஞ்சு கொதித்தது. என் நாச்சியை யாரோ, பலாத்காரம் செய்வதுபோலவும், அவள் முரண்டுவதுபோலவும், ஒரு காட்சிச் சுருள், ஓடுகிறது. என்ன மனம் இது! அன்பு எங்கேவைக்கிறோமோ, அங்குதான் ஆத்திரம் வருமாம்! அவள்மீது, கோபம் கோபமாய் வந்தது. மணியோ ஆறாகிவிட்டது! இருட்டும் வந்துவிட்டது! இன்னும் நாச்சி வரவில்லை. எரிமலையாயிற்று என் மனம்! குடிசைக்குள் போனேன். குண்டாந்தடியொன்றை எடுத்துக்கொண்டேன். கோபமாகப் புறப்பட்டேன்!

(வளரும்)

சி. பி. சிற்றரசு

தோழர் சிற்றரசு பெங்களூரில் முதல் முறையாக (பதினைந்து நாட்கள் மருத்துவம் பெற்ற பிறகு, மீண்டும் சனிக்கிழமை பரிசோதிக்கப்பட்டு, இதுவரை உட்கொண்டு வந்த மருந்துகளோடு மேலும் இரண்டுவித மருந்துகளைச் சேர்த்துச் சாப்பிடவும், அதன்பிறகு இருபது நாட்களில் பத்து ஊசிகளைப் போட்டுக் கொள்ளவும் பணிக்கப்பட்டிருக்கிறார். ஆகவே மேற்கண்ட எல்லாவித மருத்துவங்களையும் முடித்துக் கொண்டு ஜனவரி முதல் வாரத்தில் ஊர் திரும்புவார். அவர் உடல் நலத்தை விசாரித்த பல தோழர்கள் எழுதும் கடிதங்களுக்கு தனித்தனியாகப் பதில் தரமுடியாத நிலையில் அனைவர்க்குமே மேற்கண்ட செய்தியை அன்புடன் அறிவிக்கிறார்.

வாழுகிறார்!

மொட்டவிழ்ந்து முறுவல் செயும் முல்லையன்ன
முழுநிலவில் அவள்முகமும் எழில் பெருக்கும்;
கட்டவிழ வில்லையவள் தளிரின் மேனி;
காதலுளம் சற்றேனும் தீயவில்லை;
பொட்டழித்து விதவையெனப் பட்டம் சூட்டிப்
பூவையினை மூலையிலே கிடத்தினார்கள்
கட்டழகி காதலுக்கு வரம்பு கட்டும்
கயவர்களோ வாழுகிறார் மாளவில்லை!

மின்னலைப்போல் அவள்கடைக்கண் வீச்சி ருக்கும்;
முந்திவரும் கொங்கைஎழில் பூத்து நிற்கும்;
பொன்னிதழாற் சுவையமுதம் உண்ணுதற்கும்
பூவையவள் காதல்உளம் துடி துடிக்கும்
மென்குழலிற் பூவவிழ்த்து விதவையென்றே
விளம்பினார்; மூலையிலே கிடத்தி னார்கள்
கன்னல்மொழி யாள்காதல் தீய்க்கும்பொல்லாக்
கயவர்களோ வாழுகிறார் மாள வில்லை!

சுவையூறும் கன்னங்கள் துவள வில்லை;
துடியிடையைச் சித்திரமும் மிஞ்ச வில்லை;
அவளுளத்தே அலைபோல இன்ப எண்ணம்
ஆர்த்தெழுந்து காதல்செயத் துடி துடிக்கும்;
இவைகண்டும் பொன்னணியை உடையை மாற்றி
இயம்பினார் விதவையென, மூலை சேர்த்தார்;
துவள் கொடியாள் காதலுக்கு வரம்பு கட்டும்
துட்டர்களோ வாழுகிறார் மாளவில்லை!

—சாமி பழனியப்பன்

திராவிடநாடு

காஞ்சி] 12—12—54 [ஞாயிறு

நடிகர் சங்க நற்பணி

★

நாடகக்காரர்கள்!—என்று கேலியோடு அழைப்போரின் கண்ணுக்கு, இரண்டொரு தினங்களாகச் சென்னை சட்டசபையில் நடைபெற்றுவரும் காட்சிகளைக் கவனத்துக்குக் கொண்டு வருகிறோம். சென்னை அரசு கொண்டுவரத் துடித்த நாடகத் தடை சட்டத்தை 'பொறுக்கு கமிட்டி'யின் பரிசீலனைக்கு விட, சர்க்கார் பணிந்திருக்கிறது. பலன், கிடைக்குமா? — அது, பிறகு பார்க்க வேண்டிய விஷயம். ஆனால், அவசரக் கோலத்தில் அள்ளி வீசப் போகிறோம் — அனுமதிப்போமா சீர்திருத்த நாடகங்களை-என்று, கர்ஜித்த 'கனம்'கள், சிறிது கவனித்துயோசிக்க வேண்டியவர்களாயிருக்கின்றனர். இப்படி யோசிப்பதும், தவறைத் திருத்திக் கொள்ள முயலும் பண்பும் நமது மந்திரிமார்களுக்கு ஏற்பட்டிருந்தால், பல விபரீதங்களை நாடு கண்டிருக்காது. இப்போதாவது, அந்த நல்லுணர்ச்சி தென்பட்டிருப்பதைக் காண மகிழ்கிறோம். சட்ட சபையில், 'சகஜானந்தங்கள்' சல்லடம் கட்டினராம்! சகஜம் இது-ஆனந்தலாகிரியில் கூத்தாடும், ஆசாமி, அது. எனவே, அவைகள், ஒரு பிரச்னை அல்ல. எனினும், ''ராமாயணத்தைப் பற்றிப் பேசுகிறவர்களைக் கொன்று விடுவேன்,'' என்று கூறுகிற அளவுக்கு, 'அகிம்சா' புரியில், ஒரு ஆத்மா உலவுவதுதான் விந்தையாகும்! இப்படிப்பட்ட மந்தைக் குணம், வளரும் புதுயுகத்துக்கு, நல்லதல்ல!!—அதனை, உணர்ந்ததாலேயே, பல காங்கிரஸ் உறுப்பினர்களே, நாடகத்தடை சட்டம் கூடாதெனக் கூறியிருக்கின்றனர். சட்டசபையில், கம்யூனிஸ்டுக் கட்சி, பி.சோ. கட்சி, முதலிய பலரும் ஒன்று சேர்ந்து இச்சட்டத்தை முழு மூச்சுடன் எதிர்த்திருக்கின்றனர்! அதனால், மசோதா, சட்டம் ஆகாமல் 'பொறுக்கு'க்கமிட்டிக்குப் போயிருக்கிறது!! அந்தக் கமிட்டி, மசோதாவில் செய்யப்பட வேண்டிய திருத்தங்களையும் யோசனைகளையும் பரிசீலனை செய்யுமாம். பரிசீலனையின் முடிவு, எப்படியிருக்குமோ! நாம் அறியோம்!!

எனினும், இந்தப் பணிவு ஏற்பட்டமைக்காக, மகிழ்கிறோம். இதற்காக, ஒன்று திரண்டு எழுந்த நடிகர்கள் சங்கத்தின் முயற்சியை வாழ்த்துகிறோம். தமிழகத்தில், சுமார் 13,000 பேருக்கு மேல், நாடக சம்பந்தமான துறையில் ஈடுபட்டிருப்பதாக ஒரு புள்ளி விபரம் கணக்கிடப்பட்டிருக்கிறது. இவர்களது வாழ்க்கைக்கே உலைவைக்கும் அளவிலேயே, சர்க்காரின் சட்டம் இருக்கிறது! நிபுணர்களின் ஆலோசனையின் பேரில் தயாரித்த மசோதாவாம், அது!! நிபுணர்களுக்கென்ன—ஆளுவோரைப் பலப்படுத்த ஆயிரம் யோசனைகள் சொல்லக் கூடும். அவர்களை நம்பி ஒரு அரசு, இவ்வளவு மோசமான ஒரு மசோதாவைக் கொண்டு வரவே துணிந்திருக்கக் கூடாது. தோழர் காமராஜரை, நடிகர் சங்கத் தூதுவர்கள் சந்தித்தபோது, ''என்ன செய்வது! மசோதாவைக் கைவிட முடியாதே— என்னென்ன செய்ய வேண்டுமோ, அவைகளைக் கூறுங்கள். செய்து தருகிறோம்,'' என்றாராம். அந்தச் சொல், நிறைவேறுகிறதா என்பதை நடிகர் சங்கத் தோழர்களைப் போல, நாமும் உற்றுப் பார்த்த வண்ணமே இருக்கிறோம்! சந்திக்க வருவோரிடம் சிரிக்கப் பேசிவிட்டு, பிறகு கழுத்தில் கத்திவைக்கும் வகையில் போகாது, நடிகர் சங்கம் கூறிடும் யோசனைகளை ஏற்று. அதற்கொப்ப, இந்தச் சட்டத்தை வேண்டுமானால், பவனிவரச் செய்யட்டும்! அதுதான், நல்வழி!! அதைவிட்டு, கோணல் மதி செல்வது, குமுறும் எரிமலையைக் கிளறுவதாகும் என எச்சரிக்கிறோம்.

தமது உரிமை பறிக்கப்படுகிறதென அறிந்ததும் அதனை எதிர்த்து முரசு கொட்ட முன்வந்த நடிகர் சங்க நண்பர்களையும், நிர்வாகிகளையும் பாராட்டுகிறோம். 'நாடகத் தடை, யாருக்கோ?' என்று கருதிடாமல், உரிமையுள்ளத்துடன் ஒன்று கூடிய, அவர்கள் உள்ளத்தூய்மையை வாழ்த்துகிறோம்! இப்படித் தட்டிக்கேட்கும் துணிவு, ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டுவிட்டால், எந்த அரசும் அக்கிரமப் பாதையில் செல்லமுடியாது. ஆனால், முன்னேற்றக் கொள்கைகள்மீது சர்க்கார் பாய்கின்றனர்!—என்றால், அதுயார்மீதோ எய்யப்படும் அம்பு, எனும் 'ஆனந்த லகரி'க்கு ஆளாகும் ஆத்மாக்கள், நிறைய உண்டு இங்கே. அந்த எண்ணம், எல்லாத்துறையிலும் ஒழிய வேண்டும்! சுதந்திரம் — பொதுச் சொத்து. அதைப்போல, முற்போக்குக் கொள்கைகளும் பொதுச்சொத்து. இதனை, எல்லோரும் அறிந்து நடந்தால், எதற்கெடுத்தாலும் நம்மீது பாயும் எரிச்சல் குணம் அடங்கும்! உண்மை மலர வழி ஏற்படும்!! அந்த வகையில், அரசின் போக்கு தனிப்பட்ட ஒரு இயக்கத்துக்கு எதிரிடையானதுமல்ல — அறிவுக்கே போடப்படும் தடை என்பதை உணர்ந்து— முழக்கமிட முன்வந்த பல்வேறு கட்சியினரையும், நடிகப் புரவலர்களையும், மனமார வாழ்த்துகிறோம். இப்படிப் பட்ட, பொது உறவு, பூரிக்கும் காட்சியாகும்! 'பொறுக்குக் கமிட்டி'க்குப் போயிருக்கிறது, மசோதா — திரும்பி வரும்போது, எப்படியிருக்கிறது என்பதை, எல்லோரும் கவனிக்கவேண்டும். 'பழைய பெத்தாஜகை' இருந்தால், தூக்கப்பட்ட கொடியை ஏந்தி, துந்துபி முழக்கிட எவரும் அஞ்சக்கூடாது. நடிகர் சங்கம், நல்ல மாற்றங்களை, மசோதாவில் செய்ய— எடுத்துக் கொள்ளும் முயற்சிகளுக்கு, என்றும் நம் ஆதரவு உண்டு. தி. மு. க. நாட்டின் நன்மைக்குரிய செயல்களில் ஈடுபடப் பின்வாங்காத கழகம்! அதனாலேயே, நடிகர்கள் மத்தியில் உருவான இந்த ஒற்றுமையையும், உரிமைக்கு ஏற்படும் ஆபத்தைக் கண்டிக்க பல தரப்பட்ட கட்சியினரும் முன்வந்த பெருந்தன்மையையும் கண்டு அகமகிழ்கிறது. ''நாடகச் சட்டம், இந்த நாத்திகர்களுக்காகவே!''என்று நாத்தழும்பேற பேசிடுவோரும் உண்டு! ''இல்லை, நாட்டைப்பற்றிய சட்டம் அது'' என்று எடுத்துக்காட்டி, பொது உரிமைக்குப் போராடி கண்ணியத்தைக் காப்பாற்றிட நடிகர்கள் முன்னணி முன்வந்திருக்கிறது!! இது வரை வாயில்லாப் பூச்சிகள் எனக் கருதப்பட்டு வந்த அவர்கள், தமக்கும் நாட்டு வாழ்வுக்குமுள்ள தொடர்பை நன்கு வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்—இந்தச் சமயம். இல்லையென்றால், சர்வகட்சியும் போராடும் நற்சாட்சி ஏற்பட்டிருக்காது! அந்த வகையில், வளர்ந்து வரும் நடிகர் சங்கத்தை வாழ்த்துகிறோம். நாடகத்தடைச் சட்டம், 'ஆபரேஷனு'க்குப் பிறகு, நோயில்லாத உடலுடன் உலவவந்தால் வரட்டும்! இல்லையென்றால்.........!!

★

"திராவிட நாடு"

பொங்கல் மலர்

★

சி. என். ஏ.

தீட்டும்

சிறந்த கட்டுரைகளுடன்

வெளிவருகிறது.

"அமரதாரா" - போயிற்று!!

தமிழ்நாட்டின் பிரபல தேசிய எழுத்தாளரான நண்பர் 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் மறைந்த செய்திகேட்டுத் திடுக்கிட்டோம். எதிர்பாராத இச்செய்தி உண்மையிலேயே, நம்மைக் கலங்க வைத்துவிட்டது.

தமிழ் நடையில் ஒரு நகைச்சுவையையும், சரித நிகழ்ச்சிகளின்மீது 'சமையல்கட்டு'க்குக்கூட ஒரு ஆவலையும் தூண்டிவிட்ட எழுத்தாளர் அவர். அவரது, எழுத்து–செயல் பற்றி, கருத்து வேறுபாடுகள் நிறைய உண்டு. ஆனால், அவரது திறமை—செயல்வன்மை, நிச்சயம் பாராட்டுக்குரியதாகும். தமிழ்நாட்டில் எஸ். எஸ். வாசனின் "ஆனந்த விகடன்" பீடுநடை போடிடும் பெருமைக்கு 'கல்கி'யும் காரணமாவார். திரு. வி. க. எடுத்துத் தந்த பேனா, வீணாகவில்லை! அவரிடம் பெற்ற பயிற்சி, அன்பர் கல்கியை, சிறந்த தமிழ்ப்பிரியராக்கிற்று. அதனால், தமிழிசை, தமிழ்க் கவிதைகள் முதலியவற்றில் பிற தேசிய எழுத்தாளர்களை விட அவரிடம் ஒரு தனி ஆர்வம் கண்டோம்! இதேபோல, நாட்டியம், இசை, நாடகம் முதலிய துறைகளைப் பற்றி 'ஆடலும் பாடலும்' எனும் மகுடமிட்டு 'கர்நாடகம்' எனும் பெயரில் அவர் செய்து வந்த விமர்சனம், தமிழ்க்கலைத் துறையில் குறிப்பிடப்படவேண்டிய சேவையாகும். விமர்சனம் என்றாலும் அதை விரும்பிப் படிக்கும்படி வாசகர்களைச் செய்த பெருமை நண்பர் கல்கிக்கு உரித்தாகும்! அத்தகைய எழுத்தாள நண்பர் இறந்துவிட்டார் என்பதை எண்ணும்போது, உண்மையிலேயே வருந்துகிறோம.

*

தீவிரவாதியல்ல, அவர்! சீர்திருத்தத்துக்கும் பழைமைக்கும் இடையிலே அல்லாடும், 'அந்த இடத்து' எழுத்தாளர்களைப் போன்றவர்தான். எழுத்தாளர் கூட்டத்திலே பழைமையைக் கட்டி மாரடிக்கும் 'செக்கு'ச் சுபாவம் கொண்டோரைப் போல இல்லாது, பழைமையைச் சில சமயத்தில் போற்றியும், புதுமையைச் சில சந்தர்ப்பங்களில் வாழ்த்தியும், இரண்டிலும் சேராது இடை நிலையில் ஆடிவந்தார்! எனினும், ஆரம்பகாலத்தில் அவருடைய எழுத்துக்கள்கொண்டிருந்த கனல்வேகம், பிற்பாடு குறைய நேர்ந்தது என்பதை எவரும் மறுக்கமுடியாது. தேசியப் போரில், ஈடுபட்ட தியாகி—எழுத்தை அதற்கெனச் செலவிட்ட இலட்சியவாதி—வாழ்க்கை ஆரம்பம் காங்கிரஸ் கட்சி அலுவலக 'குமாஸ்தா'வாகத்தான் இருந்தது—ஆனாலும், அந்த இடத்தைப் பெறற்கரிய பேறு என எண்ணிப் பணியாற்றியே பலரது கவனத்தையும் கவர்ந்தார் அவர்! அவர் தீட்டிய "தியாகபூமி" திரைப்படம், வெள்ளையரால், தடை செய்யபட்டது பலருக்கு நினைவிருக்கலாம். அவருடைய எழுத்துத் திறமையை, பெரும்பாலும் 'அடுப்பங்கரை'களையும், 'ஊஞ்சல் பலகை' உல்லாசிகளையும், திருப்திப்படுத்தப் பயன்படுத்தாது, துவக்கத்திலிருந்த வேகம் துவளாமல் செய்திருந்தாரானால் புதுமை பெறத் தவிக்கும் தமிழகத்துக்கு அவரது சேவை மிகவும் பயன்பட்டிருக்கும். அந்த நிலை, அவருக்கு அமைந்த வாழ்க்கையமைப்பால், இல்லாது போனது, உண்மையில் வருந்தக்கூடியதே!!

*

'கல்கி, கடைசிவரையில் அன்பர் ஆச்சாரியார் அவர்களையே ஆசானாகவும், ஏக தலைவர் எனவும் பின்பற்றி வந்தார். கண்மூடித்தனமாக என்று கூடச் சொல்லலாம். ஆச்சாரியாரது அரசியல் வாழ்க்கையில் சில சலனங்கள் ஏற்படவும், அதேபோல் 'கல்கி'யின் பெயரில் சில மருக்கள் முளைக்கவும், ஒருவருக்கொருவர் காரணமாயிருந்திருக்கின்றனர். தவறானாலும், சரியானாலும் ஆச்சாரியார்மீது ஒரேவித நம்பிக்கை வைத்திருந்தார், கல்கி! ஆசை கண்ணை மறைக்கும் என்பதுபோல, அந்தப்பக்தி, 'கல்கி'யின் உள்ளத்தையே மூடிவிட்டது! அதனால், அவர் பெற்ற ஏச்சும் பேச்சும், ஏராளம். எனினும், அவைகளையெல்லாம் தனது குருநாதருக்காகத் தான் தாங்கிக்கொள்ளும் கணைகள் என்று மகிழ்ச்சியாகவே ஏற்றுக்கொண்டார்! ஏகலைவன், விசுவாசம்! பழி, கல்கிக்குத்தான். அதனால்தான், அன்பர் ஆச்சாரியார் அவர்கள், இடுகாட்டில் கண்ணீர் வடித்தாராம்! உண்மையில், கலங்கக்கூடிய சம்பவம்தான். ஆச்சாரியார் அவர்களுக்கு நமது மனமார்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

*

எழுத்தாளர்களின் நிலையைப் பற்றி எண்ணியவர் கல்கி! பலருக்கு நினைவுச் சின்னம் எழுப்பப் பாடுபட்டவர், அவர்! அவருடைய செயலும், ஆர்வமும், அகால மரணத்துக்கு இரையான சில எழுத்தாளக் குடும்பங்களின் துயர் துடைக்கப் பயன்படவில்லையே என எண்ணுகின்ற அளவுக்கு, இந்தத் துறையில் அவர் கவனத்துக்குரியவரானார். பலர், பெருத பாக்கியம், இது! இதனால், பலரால், பிரச்னைக்குரியவராகவும் ஆனார்! தேசியக் கூடாரம் முழுவதும் எரிச்சல் கணைகளைப் பூட்டினாலும், சில சமயங்களில், நமது சேவைகளை அவர் புகழ்ந்ததும் உண்டு. எழுத்துத்துறையில் நமது இயக்கம் உண்டாக்கியிருக்கும் மறுமலர்ச்சி, பல தேசிய எழுத்தாளருக்கு—எரிச்சலையும் கோபத்தையும் உருவாக்கியிருக்கிறது; ஆனால், 'கல்கி' வரவேற்றார்-மகிழ்ந்தார். அதேபோல, மாற்றாரிடம் இருக்கும் சில நற்பண்புகளை, அவர் பாராட்டத் தயங்கியதில்லை! வாழ்த்தப் பயந்ததில்லை!! இதனால்தான், அவருடைய மறைவு, இன்று பலருக்கும் வருத்தத்தைக் கொடுக்கிறது. அதிலும், எரிச்சல் எனும் புகை மண்டலத்தின் மத்தியிலே மிதக்கும் நமக்கு, அவரது மறைவு உண்மையில் வேதனையைத் தருகிறது! அவர், மாற்றாரைத் தாக்கும்போது கையாண்ட கண்ணியம் கவனத்துக்கு வருகிறது!! அத்தகையவர், இவ்வளவு விரைவில், இறந்ததை எண்ணி உண்மையிலேயே வருந்துகிறோம். திகைத்துக் கிடக்கும் அவரது குடும்பத்தாருக்கும், 'கல்கி' நிலையத்துத் தோழர்களுக்கும், எழுத்தாளர் உலகுக்கும் நமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். எழுத்து-வானில், அவரும், ஒரு அழியாத நட்சத்திரம்! அது போய் விட்டது!! புகழ் என்றும் நிலைத்திருக்கும்!!

★

சோவியத் முன்னேற்றம்

[அண்மையில் சோவியத் நாடுசென்றிருந்தபோது, பேராசிரியர் பிரசாந்த சந்திர மகலனேபிஸ் அவர்கள் சோவியத் முன்னேற்றம் பற்றி மாஸ்கோ ரேடியோவில் ஆற்றிய சொற்பொழிவுகள் டில்லியிலிருந்து வெளிவரும் "சோவியத் நாடு" என்ற பத்திரிகையில் தொடர்ச்சியாக வெளிவருவதில் ஒரு பகுதி இங்கு தரப்படுகிறது.]

நான் சோவியத் யூனியனிற்கு முதன் முதலில் 1951ல் விஜயம் செய்தேன். அதற்கு அடுத்த ஆண்டில் இங்கு மீண்டுமோர் முறை வந்திருந்தேன். திரும்பவும் இரண்டு வருடங்களுக்குப் பின்னர், இப்பொழுது நான் மூன்றாவது தடையாக இங்கு வந்திருக்கிறேன். இரண்டு வருடங்களுக்குப்பின் இங்கு வந்துள்ள நான் அதிசயிக்கத்தக்க வகையில் சோவியத் மக்கள் முன்னேறி வருவதைக் கண்டு ஆச்சரியப்பட வேண்டியதாயிருக்கிறது.

மாஸ்கோ மாநகரில் கட்டி யெழுப்பப்படும் கட்டிடங்கள் கணக்கில் அடங்கா. 2 லட்சத்திலிருந்து $2\frac{1}{2}$ லட்சம் மக்கள் வசிப்பதற்குப் போதுமான புதிய குடியிருப்புக் கட்டிடங்கள் ஆண்டுதோறும் கட்டப்பட்டு வருகின்றன. புதிய வீதிகளும் பூங்காக்களும் அமைக்கப்பட்டு வருகின்றன. பல் மாடிகளையுடைய மாபெரும் கட்டிடங்கள் எங்கு பார்க்கினும் எழுந்தவண்ணமுள்ளன. இரண்டு ஆண்டுகளுக்கு முன் நான் வந்திருந்த போது 27 மாடிகளையுடைய ஒரு பெருங் கட்டிடத்திற்கு அஸ்திவாரம் அமைக்கப்பட்டு வந்ததைப் பார்த்துச் சென்றேன். இன்று இதே இடத்தில் இதைபோன்ற ஏழெட்டுக் கட்டிடங்கள் காட்சியளிக்கின்றன. காரியாலயங்களாகவோ அல்லது குடித்தன இல்லங்களாகவோ இவை உபயோகிக்கப்பட்டு வருகின்றன. தேசமெங்கும் கட்டிட வேலை நடந்த வண்ண முள்ளது. தேசத்தின் பொருளாதாரம் ஓங்கி வளர்ந்து வராதநிலையில் இவ்விதம் மாபெரும் அளவில் நிர்மாண வேலைகள் நடைபெறுவது சாத்தியமல்ல.

கடைகளிலும் சந்தைகளிலும் நான் கண்ணுற்றது சோவியத் பொருளாதார எழுச்சிக்கு மற்றொரு சான்றாக விளங்கியது. இரண்டு ஆண்டுகளுக்கு முன் வந்திருந்த போதும் நான் கடைகளுக்கும் சந்தைகளுக்கும் சென்று சுற்றி அலைந்து பொருள்களின் விலைகளைக்குறித்துக்கொண்டுவந்தேன். இம் முறை நான் இங்கு சென்ற போது விலைகள் மீண்டுமோர் முறை கணிச அளவு குறைக்கப்பட்டுள்ளன வென்பது கண்கூடாகப் புலப்பட்டது. 1947-ம் ஆண்டிலிருந்து பல்வேறு பண்டங்களின் விலைகளும் ஆண்டுதோறும் குறைக்கப்பட்டு வந்துள்ளன. இதன் பயனாக இன்றுள்ள விலைகள் 1947-ம் ஆண்டு விலைகளில் அனேகமாய் சரிபாதியாகக் குறைந்திருக்கின்றன.

ஆர்மீனியாவிற்கு நாங்கள் சென்றிருந்தோம். இந்தியர்களைப்போல் ஆர்மீனியர்களும் பழமையானதொரு கலாசாரத்தைப் பெற்றுள்ளார்கள். புரட்சிக்கு முன்பு அவர்களுடைய நிலைமை எங்கள் நிலைமையைக் காட்டிலும் மிகமிக மோசமாயிருந்தது. ஆனால் சமீப காலத்தில் அவர்கள் இயந்திரத் தொழில் துறையிலும் விஞ்ஞானத் துறையிலும் இதர துறைகளிலும் அதிசயிக்கத்தக்க வகையில் முன்னேற்ற மடைந்துள்ளதின் விளைவாக, இன்று ஆர்மீனியா இந்தியாவைவிட மிகவும் முன்னேறிச் சென்று விட்டது. இதைவிட முக்கியமாக ஒன்றைக் குறிப்பிட வேண்டும். அவர்கள் தம் ஆக்க வேலையின் ஆனந்தத்துடன் சிறந்து விளங்குகிறார்கள்; புதியதொரு வாழ்வு பெற்றுள்ளனர் என்றே கூறவேண்டும். ஆர்மீனியாவிற்கு நான சென்றிருக்காவிட்டால், சோவியத் நாடு பற்றி நான் போதுமான அளவு தெரிந்து கொண்டிருக்க முடியாது. சோவியத் பூமியிலே ஒரு புதிய நாகரிகம் சிருஷ்டிக்கப்பட்டுள்ளதென்பதை நான் ஆர்மீனியாவைப் பார்த்த பின்னர் தான் புரிந்துகொள்ள முடிந்தது.

சோவியத் விஞ்ஞானிகளைச் சந்தித்துப் பேசியபோது பல்வேறு துறைகளிலும் சோவியத் நாடு எவ்வளவு முன்னேறிவிட்டதென்பது புலப்படலாயிற்று. உதாரணமாக புள்ளி விபர விஞ்ஞானத்தில் சில துறைகளிலும் பிரச்னைகளிலும் சோவியத் யூனியன் ஏனைய நாடுகளைவிட மிகவும் முன்னேற்றமடைந்துள்ளது. இங்கு இவ்வேலை பிரம்மாண்ட அளவில் நடைபெற்று வருவதே இந்த முன்னேற்றத்தின் காரணமாகும்.

★

மதுரை மாநாடு

மதுரை மாவட்ட தி.மு.க. இரண்டாவது மாநாட்டின் வரவேற்புக் குழுக் கூட்டம் 4-12-54 இரவு 7 மணிக்கு வரவேற்புத் தலைவர் தோழர் எஸ். வி. தொந்தி அவர்கள் தலைமையிலும், தலைமைநிலைய செயற்குழு உறுப்பினர் என். வி. நடராசன் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது. கூட்டத்திற்கு 33 பேர் வரவேற்புக் குழு உறுப்பினர்களும், 7 பேர் தனி அழைப்பாளர்களும் வந்திருந்தனர். கூட்டத் துவக்கத்தில் தோழர் என். வி. நடராசன் அவர்கள் உறுப்பினர்களுக்கு தலைமைநிலைய சார்பில் வேண்டுகோள்விடுத்துப் பேசினார். அடுத்து கீழ்க்கண்ட முடிவுகள் செய்யப்பட்டன.

1. மாநாட்டை 1955 ஜனவரி 8, 9 தேதிகளில் நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

2. வரவேற்புக் குழுத் தலைவர் பொருளாளராக எஸ். வி. தொந்தி அவர்களும், செயலாளர்களாக எஸ். முத்து, எம். அய்யாச்சாமி ஆகியோரும், தொண்டர்படைத் தலைவர்களாக பி. கே. சேதுராமன் எஸ். எஸ். ராஜேந்திரன், கு. வேலு ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

3. சமூகசீர்திருத்த மாநாட்டிற்கு தோழியர் சத்தியவாணிமுத்து அவர்களைத் தலைவராகவும், தோழர் தில்லை வில்லாளன் அவர்களைத் திறப்பாளராகவும், அரசியல்மாநாட்டிற்கு மு. கருணாநிதி அவர்களைத் தலைவராகவும், தோழர் எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ. அவர்களைத் திறப்பாளராகவும் அழைப்பதென தீர்மானிக்கப்பட்டது.

4. மாநாட்டு அலுவலகத்தை மதுரை நகர் தி. மு. கழக அலுவலகம் 4 கட்ருபாளையத்தில் வைத்துக்கொள்வது என தீர்மானிக்கப்பட்டது.

அறிய வேண்டும் அதனை

"பட்டப் பகலில், வீட்டுக்குள் புகுந்து, நாசம் விளைவித்தான்—இவன்."

இது சட்டப்படி, குற்றம்.

"நள்ளிரவில், கன்னக்கோலேந்தி, களவாடினான்"

சட்டப்படி, இதுவும் குற்றமே.

"தண்டவாளங்களைப் பெயர்த்து' ரயிலைக்கவிழ்த்து, அக்கிரமம்செய்ய முயன்றான்"

இதுவும், சட்டப்படி குற்றம்தான்.

*

நாசம் விளைவித்தான்—ஏன்?

களவாடச் சென்றான் — **காரணம் என்ன?**

கவிழ்க்க முயன்றான்—**எதற்காக?**

*

நீதி மன்றத்தில், சட்டம்தான் பேசும்—ஏன்? என்ன காரணம்? எதற்காக? என்ற கேள்விகளை, நீதி மன்றங்கள், பொதுவாக அனுமதிப்பதில்லை. ஆனால், அந்தக் கேள்விகள், மக்கள் மன்றத்தில் கேட்கப்பட்டு, அதற்கான விளக்கங்களும் பரிமாறிக் கொள்ளப் படும். சாதாரணமாக மக்கள் மன்றத்தின் விளக்கங்கள், நீதி மன்றங்களைத் தொடுவதில்லை. நீதி மன்றத்துக்கும்—மக்கள் மன்றத்துக்கும் தொடர்பில்லையென்பதால் அல்ல; இரண்டுக்குமிடையில் உள்ள தூரம், சாதாரணமாக அதிகமாக்கப்பட்டிருக்கிறது.

*

பட்டப்பகலில் பணக்காரர் பரமசிவம் வீட்டில், பாட்டாளி பலராமன் நுழைந்தான், தாக்கினான்—இதுவே நீதி மன்றத்தில், நிற்கும். ஆனால், பலராமன் நுழைந்ததற்குள்ள காரணம் என்ன? பரமசிவத்தைத் தாக்குமளவுக்கு, ஆத்திரம் ஏற்பட்டதன், வகை யாது? நீதிமன்றத்துக்குத் தேவையில்லாதது, இது.

அதேபோல, காரிருளில், கன்னக்கோலேந்தி, அவன் ஏன் திருடச் செல்ல வேண்டும்? இது சமுதாயத்தின் நிலைமையைப் பற்றிய பிரச்னை. ஆனால், சட்டம் கவனிப்பது, அவன் புகுந்தானா—இல்லையா என்பதைத்தான்.

இதே போலத்தான், ரயிலைக் கவிழ்க்க முயன்றவனின் நிலைமையும்—அவன் அந்தளவுக்கு வெறிச்செயலில் ஈடுபடும்படி ஏற்பட்டதற்கான, காரணம் யாது? ரயில் மீது கோபமா!—இருக்க முடியாது. இன்ஜின் டிரைவருடன், சண்டையா! —இதல்ல அதற்கு வழி. பின், ஏன், அத்தியவழி சென்றான். அதற்குள்ள காரணத்தை விளக்கி விளக்கிப் பார்த்தால், கடைசியில் உண்மை தெரியும்.

*

ஈடுபடும் செயல்கள், தவறானவை, என்பதை அறியாதவர்களல்ல, இவர்கள். பரமசிவத்தைத் தாக்குவது, மனித முறையை, அவமதிப்பதாகும் என்பதையும்—கன்னக் கோலேந்துவது கண்டோர் பழிக்கக்கூடிய காரியங்கள் என்பதையும் — ரயிலைக் கவிழ்ப்பது, மகத்தான நஷ்டம் விளைவிக்கும் மாபாதகச் செயல் என்பதையும், அந்தந்த காரியங்களில் ஈடுபடும், மனிதன், அறியாதவனல்ல. இவைகள், மனித முறையை, மீறும் காரியங்கள் என்பதை, ஒவ்வொருவனும் நன்றாக, அறிவான்! ஏனெனில், அவனும் மனிதன்—அவன் போன்ற மனிதக் கூட்டத்துக்காகத்தான், சட்டங்கள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. இருந்தும் அவன், அந்தச் சட்டங்களை மீறுகிறான். "ஏனப்பா? நீ, இப்படிச் செய்யலாமா!"—கோர்ட்டில், இப்படிக் கேட்கப்படுவதில்லை—ஆனால், நேரில், அவர்களைக் காணும்போது, கேட்டுப்பாருங்கள், "என்னமோண்ணே! நீ, புத்தி போதிக்க வந்துட்டே. என் நிலைமையில், இருந்தால் உனக்குத் தெரியும்," என்றே, ஒவ்வொருவனும், சொல்வான். ஆறறிவு படைத்த மனித ஜாதிக்குள், அவன் ஒழுங்கோடு வாழ்வதற்காக ஏற்படுத்தப்பட்ட சட்டங்களை, அவனே மீறும்படியாக ஏற்படுகிற, நிலைமை எது, என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும் — இந்தக் 'கடினமான' வேலையைச் செய்ய, வழக்கறிஞர்களுக்கும், நீதி மன்றங்களுக்கும், போதுமான ஓய்வு கிடைப்பதில்லை. அப்படி, ஓய்வே, வழங்கப்பட்டாலும், இது அல்ல, அவர்களுடைய வேலை! "குற்றம் நடைபெற்றதா? இல்லையா?" "அது, எந்தச் சட்டம், எந்தப் பிரிவுப்படி குற்றம்?"

"அந்தப் பிரிவுப்படி, இந்தக் குற்றத்துக்கு, என்ன தண்டனை?"

இதுவே அவர்களுடைய, வேலையாகும்—இதனால் அவர்களுடைய வேலையைக்குறை சொல்கிறோமென்பதல்ல, பொருள்—இதுதான், அவர்களுடைய பணி, என்று, தற்கால அமைப்பில், வரையறுக்கப்பட்டிருக்கிறது. இதனாலேயே, பல குற்றங்களுக்கான, மூலகாரணங்கள், உலகுக்குத் தெரியாமற் போகின்றன! பலர், சிறைச்சாலைகளில், நடமாடும்படியான நிலைமைகளும் ஏற்படுகின்றன!!

*

சட்டத்துக்கும்—மக்கள் மன்றத்துக்கும் இடையிலுள்ள, "**தூரத்தை**" சாதாரணமாக, யாருமே சிந்தித்துப் பார்ப்பதில்லை. பூத்துக் கிடக்கும் தாமரைக் குளத்தின் மேல் படிந்திருக்கும் பாசியையும் பச்சையையும் குறித்து, விளக்கங்கள் தருவோர், ஏராளம் இருக்கிறார்கள், ஆனால், அந்தப் பாசிப் பச்சை படரும்படி, நீருக்கடியிலிருக்கும் நிலைமைகளைப்பற்றி, குளத்தில் நன்னீரை, எதிர் பார்ப்பவன்தான் சிந்திக்கிறான். அப்படி, சிந்திப்போர் தொகை, எந்தச் சமுதாயத்திலும், மிகக் கொஞ்சமாகவே இருக்கிறது. புண்ணின் நாற்றத்தை வர்ணிப்பதும், அதைக் காட்டி, மூடவேண்டிய அவசியத்தை வலியுறுத்துவதும்—எளிது. ஆனால்

"அவர்" வேலை!

* எம். எஸ். சுப்புலட்சுமி வீட்டில் நடந்த ராமாயண காலட்சேபத்துக்குப் போயிருந்தார். திருவையாறு அண்ணாசாமி தீட்சிதர் காலட்சேபம் செய்த போது, ஓரிடத்தில் ஏற்பட்ட தவறுகளைக் கண்டுபிடித்துத் திருத்தினார்!
* உலக மகா கவி ஷேக்ஸ்பியர் இயற்றிய ஐந்து நாடகங்களை தமிழில் மொழி பெயர்ப்பதென அகில இந்திய சாகித்ய அகாடமியின் சென்னைக் குழு முடிவு செய்திருக்கிறது. 'மாக்பெத்' எனும் நாடகத்தைத் தமிழில் மொழி பெயர்ப்பார்,

யார்?

தி. மு. க. கணக்கைத் தீர்த்துக் கட்டுவேன் என்று கர்ஜித்தாரே—**அவர்தான்! ஆச்சாரியார்தான்!!**

அப்புண்ணின் காரணத்தையும், அது ஏற்படாமல் செய்வதன் அவசியத்தையும் எடுத்துரைப்பது இலேசான காரியமல்லவே—இதனுல்தான், சட்டக்கல்லூரி மாணவர்கள் மத்தியில் முன்பொருதடவை பேசிய ஆச்சாரியார் அவர்கள் "சட்டம்" குறித்து, சில வியாக்யானங்களை வழங்கினர். "சட்டங்களை மீருதீர்கள்", என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

"முற்கால சட்டங்களை மக்கள் மதித்ததேன் ?"

" அவைகள், அரசர்களால் இரகசியமாக உண்டாக்கப் பட்டன. ஆகவே, மாயசக்தி இருந்தது !" என்று, பழங்கால சட்டங்களைப் பற்றி, விளக்கமும் உரைத்தார். இந்த விளக்கத்துக்குப் பின், மேலும் கூறினர், "சபைகள், பார்லிமெண்ட் அசெம்பிளிகள் ஆகியவை ஏற்பட்டன. இவற்றில் விரிவான விவாதத்தின் பின், சட்டங்கள் ஏற்பட்டன. கடுமையான பாஷையில் கருத்து வேற்றுமைகள் தெரிவிக்கப்பட்ட பிறகு ஒரு ஓட்டு மெஜாரிட்டியில் சட்டம் செய்யப்படுகிறது. அசிங்கமான முகத்துடன் பிறக்கும் குழந்தை மாதிரி சட்டம் சிரமப்பட்டு பிறக்கிறது, இவ்விதம் பிறப்பிக்கப்படும் சட்டங்கள் மிகவும் மீறப்படுவதில், ஆச்சரியம் என்ன ?"

சட்டம், மீறப்படுகிறது! ஏன்—அவை, மக்களால் தேர்ந்தெடுக்கப்படும், சட்டசபைகளில் நிறை வேற்றப்படுவதால்! கருத்து, இது. ஆச்சாரியார்—அந்தக்கால சட்டங்கள் அரசர்களால் செய்யப்பட்டதால் மதிப்புக் காட்டப்பெற்றதென்றும், இக்கால சட்டங்கள் மக்கள் சபையால்செய்யப்படுவதால்மீறப்படுகிறதென்றும்—தெரிவித்தார் அவர்.

சட்டசபையின் முடிவுகளையே மீறும், தனித்திமிர் படைத்த, ஆச்சாரியார் கூறினர்! — ஆகவே, இதில், ஆச்சரியப்பட முடியாது தான். ஆனல், இதையே, பொது விதியாக்கி, மக்கள் எல்லோரும், சட்டத்தை மீறுவதற்குக் காரணம் அந்தச் சட்டங்கள், சட்டசபைகளில் நிறைவேற்றப்படுவதால் என்று சொல்கிருரே, அது, எந்தளவுக்கு உண்மையாகும்?

திருடுவது குற்றம்! — சட்டம், சொல்கிறது; மக்கள் நீதியும், சொல்கிறது.

கொலை—குற்றம்! — சட்டத்தின் கருத்தும் அதுதான். மக்களின் எண்ணமும், அதுதான்.

ஆனல், இவைகளை, மக்களிலே ஒரு சிலர் மதியாமல் நடந்து கொள்கிருர்களென்ருல், அதற்குக் காரணம், இவைகளெல்லாம் சட்டத்தில் குற்றம் என்று கூறப்படுகிறதே எனும், கோபத்தாலா? குருடனும், கூருன்! மனிதன் ஒவ்வொருவனும், சட்டசபைகள் சட்டம் செய்வதால் அல்ல, சட்டங்களை மீறும்படி ஏற்படுவது. அப்படிச் செய்யப்படும் சட்டங்கள், அவனைப் பாதிப்பதாலேயே மீறுகிருன். அன்று சட்டக் கல்லூரியில் ஆச்சாரியார் பேசியது போலவே, அதே கருத்தை உள்ளடக்கிவைத்துக்கொண்டு உலவுவோர், ஏராளம் உண்டு.

அவர்கள் கண்களில், சட்டங்கள் மீறப்படுகின்றனவென்பதை அறியும்போது ஆத்திரம் வழிகிறதே அன்றி, ஏன்? எதற்காக? என்ன காரணம்? என்பதைச் சிந்திக்க மறுத்து விடுகிருர்கள்.

*

பணத்தை மூட்டை மூட்டையாகச் சேர்த்து வைக்கிருர், பாக்கியநாதப் பிள்ளை. அது, குற்றமல்ல!

அதைப் பாதுகாத்துத் தருவது கூட, இன்றுள்ள சட்டத்தின் வேலை!! அதனுல்தான், வீட்டுக்குள் புகுந்தவன் மீது, விலங்கு பூட்டப்படுகிறது.

இது போலத்தான், ஒவ்வொன்றும்! இன்றுள்ள சட்டங்கள் ஏழைகளை வாழ்விக்க அல்ல. ஏதோ ஒரு பழைய சம்பிரதாயங்களுடனேயே விளங்குகிறது. இது உடைக்கப்பட வேண்டும்! மக்களுக்கான சட்டங்கள் மலர வேண்டும்!! அதுவரை, இதுபோன்ற சட்டங்களால் பயன் கிடையாது! சிலரை, 'ஜெயிலில்' அடைத்து, தீரத்தைக் காட்டிக் கொள்ளத்தான் பயன்படும். இதனை — இன்றைய ஆட்சியாளர்கள் அல்ல—நாளைய உலகமாகிய நாம், நன்ருகக் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

★

வாழ்த்துகிருேம்

'நேஷனல் பிக்சர்ஸ்' உரிமையாளர் நண்பர் பி. ஏ. பெருமாள் அவர்கள் கடந்த 5ந்தேதி வேலூரில் திருக்கோயிலூர் திருமதி மீனுட்சி அவர்களை, வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டார். திருமணம், சீர்திருத்தமுறையில், சிறப்பாக நடைபெற்றது. டாக்டர் மு. வரதராசன் தலைமையில், தோழர்கள் அண்ணல்தங்கோ, ஏ. வி. மெய்யப்பன் (செட்டியார்) 'பிரபாத்' டாக்கீஸ் கண்ணபிரான், மு. கருணுநிதி, பொதுச்செயலாளர் அண்ணுதுரை ஆகியோரின் சொற்பொழிவுடன் நடைபெற்ற திருமண விழாவில், திரையுலக நடிக நடிகையரும், படத்தயாரிப்பாளரும், எழுத்தாளர்களும் ஏராளமாக வந்திருந்தனர். திரையுலகில் புகழ்பெற்று விளங்கும் நடிகமணிகளை நாட்டுக்கு வழங்கிய பெருமையும், சீர்திருத்தக் கருத்துக்களைத் திக்கெங்கும் பரப்பும் ஆர்வத்தையும் கொண்டவர் நண்பர் பெருமாள். எனவே, அவரது திருமண விழாவில், எண்ணற்ற அறிவியக்கத் தோழர்கள் பங்குகொண்டனர். பலரிடமும் பண்போடு பழகும் அவருக்கு, பல தரப்பட்டோரிடமிருந்தும் ஏராளமான பரிசுகளும் வாழ்த்துக்களும் குவிந்தன. அந்த நண்பருக்கு நமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிருேம். அவரும் துணைவியாரும் வாழ்க வாழ்க என்று உளமார வாழ்த்துகிருேம். கருத்துக்களைச் சொல்வதோடு இல்லாது, செயலிலும் காட்டுவது கண்டு மனமகிழும் பெருமாளின் தந்தையாருக்கும், அவரது மாமனர் காமக்கூர் ராமசாமி அவர்களுக்கும், நமது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிருேம். வாழ்க மீனுட்சி பெருமாள்.

'அறிவுப் பூங்கா' நூல் நிலையத் திறப்பு விழா

5–12–54 மாலை மதுரை திண்டுக்கல் ரோடு 9 நெ. கட்டிடத்தில் அறிவுப் பூங்கா நூல் நிலையத் திறப்பு விழா நடந்தது. இயக்கத் தோழர்களும் ஏனையோர்களும் கலந்து கொண்டனர். வந்திருந்த அனைவரையும் உரிமையாளர் எஸ்.முத்து வரவேற்ருர்.



31. முடிவு

மறுநாள் காலை சரியாகப் பதினொரு மணிக்கு நீதிமன்றம் துவங்கியது.

ஹைகோர்ட்டின் வெளியில்— சைனா பஜாரில்கூட மக்கட் கூட்டம் திரளாக நின்றுகொண்டிருந்தது. 'வேறெந்த வழக்கும், எந்தக் காலத்திலும் இந்தளவு மக்கள் கவனத்தைக் கவர்ந்ததில்லை. காலையில் வெளிவந்த அத்தனை பத்திரிகைகளும் "இன்று ஆறுமுகம் வழக்கில் முடிவு" என்ற தலைப்பைத் தான் கொட்டை எழுத்துக்களில் போட்டிருந்தன.

'தினமித்திரன்' பத்திரிகை ஆசிரியர் ஒரு தலையங்கமே எழுதியிருந்தார். "........நேற்றுவரை இந்த வழக்கில் நடந்த வாக்குமூலங்களையும், வழக்கறிஞர்களின் வாதங்களையும் நோக்கும்போது, நீதி யார் பக்கம் சாயும் என்பதில் நமக்குச் சந்தேகம் தோன்றவில்லை. நாட்டிலே சட்டத்திற்கும், நியாயத்திற்கும் பயந்து வாழ்பவர்களுக்கு நம்பிக்கை தரும் வண்ணமாகவே அது அமையும் என்று நம்புகிறோம்!" என்று சூசகமாக எழுதி முடித்திருந்தார் அவர்.

கோர்ட்டின் உள்ளும் வெளியிலும் இப்படி ஆயிரக்கணக்கானவர்கள் ஆவலுடன் காத்திருக்க, கோர்ட் துவங்கியது.

"சைலன்ஸ்........சைலன்ஸ்..." என்று ஆங்கிலத்தில் அரைகுறையாகக் கத்திக்கொண்டே முன்னால் ஓடிவந்தான் ஒரு சேவகன். அவனுடைய சத்தத்தைக் கேட்டவுடன் நீதிமண்டபத்திற்குள்ளிருந்தவர்கள் தங்கள் சம்பாஷணையை நிறுத்திவிட்டு, நீதிபதி அமரும் திக்கை நோக்கினர்.

சரியாகப் பதினொரு மணியடிக்கவும், நீதிபதி தன் அறைக்குள்ளிருந்து, வந்து ஆசனத்தில் அமரவும் நேரம் சரியாக இருந்தது.

இரு தடவைகள் மேஜையைத் தட்டிவிட்டு, "ஆறுமுகம் எழுந்து நிற்கட்டும்" என்றார் நீதிபதி.

சோர்ந்துபோய்த் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டிருந்த ஆறுமுகத்தின் முதுகைத் தட்டினர், போலிசார்.

மெதுவாக எழுந்துநின்றான் ஆறுமுகம்.

"தைரியமாக இரு, ஆறுமுகம்" என்றார், பக்கத்தில் வந்த நெடுமாறன்.

சில நிமிஷங்களில் தன் தீர்ப்பைப் படிக்க ஆரம்பித்தார், நீதிபதி. அவருடைய தீர்ப்பு நீண்ட அறிக்கையாக இருந்தது. சுமார் ஒருமணி நேரம் படித்தார்.

"........சர்க்கார் வக்கீல் விவரித்தபடி, மிக உயர்ந்த இடத்தில், மிகக்கோரமான கொலை செய்திருக்கிறான், ஆறுமுகம். அந்தக் கொலையை மறைக்க, மற்றொரு கொலையும் செய்திருக்கிறான். இரண்டு கொலைகளையும் தானே செய்ததாக ஒத்துக் கொண்டுமிருக்கிறான்.

"........இந்த வழக்கிலே சட்டத்திற்கு அப்பாற்பட்ட விஷயங்களைப் பற்றிப் பேசிப் பலனில்லை. சட்டத்திற்கு உட்பட்ட அளவிலேதான் நீதியை அடைய முயற்சிக்க வேண்டும்!

"........நாட்டிலே நல்லோர்களின் உள்ளத்தைக் குலுக்கிய இந்த வழக்கின் பல அம்சங்களையும்நன்கு ஆராய்ந்தபின், **ஆறுமுகம், இருகொலைகளைப் புரிந்த பெரும் குற்றத்திற்காக வருகிற ஞாயிற்றுக்கிழமை 12-ம் தேதியன்று சட்டத்தில் கூறியுள்ளபடி, உயிரிழக்க வேண்டுமென்று தீர்ப்புக் கூறுகிறேன்!"** என்று படித்து முடித்தார் நீதிபதி.

அவர் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் ஆறுமுகத்திற்கு நன்கு புரிந்தது. பேசாமல் நீதிபதியையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு சில வார்த்தைகளில் அவன் உயிரையே, அவர் எடுத்து விட்டார்!

அப்படியே ஸ்தம்பித்த நின்ற அவன் முதுகில் யாரோ கை வைப்பது தெரிந்தது. திரும்பிப் பார்த்தான். நெடுமாறன் நின்றுகொண்டிருந்தார்.

"ஆறுமுகம்........! வா, போகலாம்!" என்றார்.

நீதிமன்றம் பூராவும் சலசலவென்ற சப்தம். ஒருவரை ஒருவர் தள்ளிக்கொண்டு வெளியேறிக் கொண்டிருந்தனர்.

ஆறுமுகமும், நெடுமாறனும் கூண்டைவிட்டு வெளியேவந்தனர். வாயிற்படியருகில் நல்லமுத்துவும் வந்து அவர்களோடு சேர்ந்து கொண்டான்.

நீதிமன்றத்தின் வாயிற்படியை விட்டு இறங்கியதும், பத்திரிகை நிருபர்கள் நூற்றுக்கணக்கில் தங்கள் காமிராக்களைக் கொண்டு 'கிளிக்' என்று அவனைப்படம்எடுத்தனர். மக்கள் கூட்டம் சூழும் முன்னம், ஆறுமுகத்தைக் கொண்டு போய்ப் போலிஸ்காரில் ஏற்றினார், நெடுமாறன்.

போலிஸ் காருக்குப் பக்கத்திலேதான் பாஸ்கரும் தன் காரை விட்டிருந்தார். ஆறுமுகத்தைக் காரில் ஏற்றிவிட்டுத் திரும்பிய நெடுமாறனும் நல்லமுத்துவும், புஷ்பா, பாஸ்கர் இருவரும் தங்கள் காரில் ஏறுவதைப் பார்த்தனர்,

ஏங்கிய முகத்தோடு புஷ்பா நல்லமுத்துவைப் பார்த்தாள். நல்லமுத்து தன் வெறுப்பை நெடுமாறன் பக்கம் திருப்பி வார்த்தைகளில் காட்டினன்.

"ஞாயிற்றுக்கிழமை இரவு, செத்த உத்தமநாதர் திரும்பி வந்துவிடுவாரா? இப்படி இன்னும் எத்தனை நாளைக்கு, நீதிக்கும் நிலைமைக்கும் சம்பந்தமில்லாமலிருக்கப் போகிறது?" என்றான், கோபமாக.

நெடுமாறன் தன் கோட்டைக் கழட்டியவண்ணமே, "நிலைமை மாறக்கூடியதுதானே......பார்ப்போம். நமது கடமையை நாம் செய்வோம்" என்றார்.

போலிஸ் கார் புறப்பட்டது.

"நானே பார்க்கிறேன், ஆறுமுகம்" என்றார், நெடுமாறன்.

ஆறுமுகம் இன்னும் சுய நினைவுக்கு வரவில்லை. அப்படியே ஆடாத விழிகளோடு அமர்ந்திருந்தான்.

அன்றிரவுவரை ஆறுமுகத்திற்கு எதிலேயும் மனம் செல்லவில்லை. திரும்பத் திரும்ப 'ஞாயிற்றுக்கிழமை காலை நாலு மணிக்கு' நடக்கப்போகும் மகத்தான சம்பவம்தான் ஞாபகம் வந்தது.

தூக்குமேடையை எண்ணிக்கூட அவன் அஞ்சவில்லை. இறப்பது கடினம்என்றோ, தன்னைத் தண்டித்தது கொடுமை என்றோ இப்பொழுது அவன் எண்ணவில்லை.

தான் இன்னும் ஒரு தடவை வாழ அவர்கள் அனுமதித்திருக்கலாம் என்றுதான் அவனுக்குத் தோன்றியது.

உலகத்தில் தானும் தன்னைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் கஷ்டப்படவில்லை; நெடுமாறன், நல்லமுத்து போன்றவர்களும் கஷ்டம்தான் படுகின்றனர் என்பது அவனுக்கு இப்பொழுது நன்றாகத் தெரிந்தது.

உலகம் இரண்டு பகுதிகளாக இருக்கிறது.

ஒன்றில் உழைப்பவன்.

மற்றதில் அந்த உழைப்பில் உல்லாச வாழ்வு நடத்துபவன்.

இதில் உயர்ந்த நிலையில் இருப்பவனுக்கு தாழ்ந்த நிலையில் இருப்பவனை, அதே நிலையில் வைத்திருக்க வேண்டிய அவசியமிருக்கிறது. காரணம், அவனுடைய உல்லாச வாழ்வு, உழைப்பவன் அறிவிலியாகவும், ஏழையாகவும், தாழ்த்தப்பட்டவனாகவும், பழைய வழக்கங்களில் நம்பிக்கையோடும்; சாஸ்திர, ஆகம விதிப்படி சூத்திரனாகவும் இருப்பதில்தான் தழைக்கிறது. ஆகவேதான் வாழ்க்கையில் ஜாதி ஆச்சாரப்படியோ, சூது, சூழ்ச்சி செய்தோ மேல்படியில் ஏறிய எவனும் அறியாமையிலும், வறுமையிலும் வாழும் தன் சகோதரர்களைத் தூக்கிவிட முயலுவதில்லை. மாறாக அவர்களில் எவனாவது தவறு செய்தால் அவனை நையப்புடைத்து, பயங்கரச் சூழ்நிலையை உண்டாக்கிச் சட்டசம்பிரதாயங்களின் பெயரால், மறுபடியும் அதே ஏற்றத்தாழ்வான சமுதாயத்திற்கு ஆக்கம் தேடுகின்றனர்.

சிறு வயதிலிருந்தே எது நல்லது; எது கெட்டது என்பதை கற்றுக்கொடுக்கவேண்டும்.

"அச்சம் தவிர்" என்று கல்லாமல், எப்படி மனிதனாக வாழ முடியும்?

எதையுமே கற்றுக்கொடுக்காமல் வாழ்க்கை துவங்கும் உத்தமநாதபுரவாசிகள் தவறுகள் செய்வதில் என்ன ஆச்சரியம்?

இந்த மாதிரி விஷயங்களைத்தான் நெடுமாறன் பேசினார் என்று நினைத்தபோது ஆறுமுகத்திற்கு மிகச் சந்தோஷம்.

இன்னுமொரு தடவை வாழ அனுமதித்திருந்தால், அவர் மனம் திருப்தியடையும்படிதான் வாழ்ந்து காட்டியிருக்கலாம் என்று திரும்பத் திரும்ப நினைத்தான்.

மறுநாள் காலை பத்துமணிக்கு சிறைக்கு நெடுமாறன் வந்தார்.

"ஹல்லோ......ஆறுமுகம்!"

"வணக்கம், சார்!"

"கவர்னர்கூட மறுத்துவிட்டார், ஆறுமுகம்!" என்று வருத்தமாக கூறினார், நெடுமாறன்.

ஆறுமுகம் அதற்காக கொஞ்சமும் கலங்கவில்லை.

"பரவாயில்லை, சார்! இனி யார்தான் மன்னிப்புக்கொடுத்து என்ன லாபம்? மறுபடியும் வாழ்வதைவிட, நான் இறப்பதே மேல்!"

"சேச்சே! ஏன் அப்படிப் பேசுகிறாய்?"

"பின்.........உங்களைப் போன்ற நல்லவர்களையே துன்புறுத்தும் இச்சமூகம்......"

"அதற்குள் சமூகத்தையே வெறுத்துவிடாதே ஆறுமுகம், நாம் உண்டாக்கியதுதானே இச்சமூகம்!"

"நம்மால் திருத்த முடியாதபடி வளர்ந்துவிட்டதே?"

"இல்லை. ஏன் அவ்வளவு நம்பிக்கையிழந்து பேசுகிறாய்? விரைவில் நாம் திருத்திவிடுவோம்!"

"செய்யுங்கள். அப்படித் திருத்தும்போது கூறுங்கள் உலகுக்கு, பயத்தில் தவறுகள் செய்யக்கூடாது என்று கற்றுக்கொடுக்காமல் அறிவிலியாகவைக்கப்பட்டிருந்த காரணத்தால் ஆறுமுகம் தூக்குமேடை ஏறினான் என்று!"

"நிச்சயமாகக் கூறுவோம். நீ பதட்டமாக இருக்கிறாய், ஆறுமுகம்"

"இல்லை. தூக்குமேடை ஏறுவதற்கு இன்று நான் அஞ்சவில்லை. ஆகவே உணர்ச்சியோடு இருக்கிறேன்!"

"அதுதான் சரியான முறை, ஆறுமுகம். ஆம்! நீ நிச்சயம் இறக்கப் போகிறாய். ஆனால் தைரியமாகத் தூக்குமேடை ஏறு. இதுவரை நீ வாழ நினைத்தபோதெல்லாம், உன் கிலிபிடித்த மனது, குறுக்கே நின்றது. உனக்கே தீங்கான தவறுகளைச் செய்யச் சொல்லித் தூண்டியது, இதற்கெல்லாம் காரணம் தெரியுமோ? உன்னைப்பற்றி மற்றவர்கள் கூறியதுதான். நீ 'கெட்டவன்' என்றார்கள், 'தாழ்ந்தவன்' என்றார்கள், உன்னை அறிவிலியாகவும், தாழ்த்தப்பட்டவனாகவும் வாழச் செய்தனர், ஒரு சில மனிதர்களைக் கெட்டவர்களென்றும், தாழ்த்தப்பட்டவர்களென்றும் திரும்பத் திரும்ப சமுதாயமே கூறினால், அவர்கள் தங்களைத் தாங்களே கெட்டவர்களென்றும், அடிமைகள் என்றும் எண்ணிக் கொள்கிறார்கள். அப்படிப்பட்ட தாழ்வு மனப்பான்மை அவர்கள் மனதில் எழாமல், அவர்களைக் கொடுமைப்படுத்துபவர்களை எதிர்த்துப் போராட தயார்செய்வதுதான் நமது வேலை. ஒவ்வொரு மனிதனும் தன்னம்பிக்கை பெற வேண்டும்; உள்ளத் தெளிவு பெற வேண்டும்; வாழ்க்கையில் நிமிர்ந்து நின்று போராடவேண்டும்.

நீ தாழ்த்தப்பட்டவனாய் இருப்பதால் உன்னை அதிகம் அடக்கப் பார்க்கிறார்கள், மாளிகைவாசிகள். ஆனால் இதே மாதிரி, நாட்டில் அவர்கள் செய்யும் அக்கிரமத்தை

எடுத்துக் கூறும் எங்களையும்தான் அடக்கி ஒழிக்கப்பார்க்கிறார்கள்.

ஏன்தெரியுமோ? அவர்களுடைய மாளிகைவாசம் நம்போன்றவர்கள் உழைப்பால்தான் தழைக்கிறது. ஆகவேதான் இன்றைய சமுதாய நிலையை அப்படியே பாதுகாக்கச் சட்டம், சம்பிரதாயம், நீதிமன்றம் எல்லாவற்றையும் துணைக்கழைக்கின்றனர்.

ஆனால் ஒன்று மாத்திரம் இதில் உனக்குத் தெரிந்திருக்கவேண்டும்.

இரு பக்கத்திலும் மனிதர்கள் வாழத்தான் போராடுகின்றனர்! ஆனால் எப்பக்கம் வெற்றிபெறும்? நிச்சயமாக, எப்பக்கத்தில் மனித தர்மமும், பெரும்பாலான மக்களும் இருக்கின்றனரோ, அப்பக்கம்தான் வெற்றி பெறும், அது நாம்தான். அவர்கள் சிலர்; நாமோ மிகப்பலர். ஆகவே வெற்றி நிச்சயம். இந்த நம்பிக்கையிலே தூக்குமேடை ஏறு, ஆறுமுகம்!"

ஆறுமுகம் பேசாமல் நின்று கொண்டிருந்தான். அவன் கண்களில் நீர் ததும்பியது.

நெடுமாறன் திடுக்கிட்டார்.

"ஆறுமுகம்.........! இன்னும் வருத்தமா......?"

"இல்லை சார்! வருத்தம் இறப்பது குறித்து இல்லை! உங்களோடு சேர்ந்து உங்களுக்கு உதவியாக உழைக்க எனக்கு சந்தர்ப்பம் இல்லையே என்றுதான்"

செச்சே! பெரும்போரில் பலியானவர்கள்தான் வெற்றிக்கு முதல் முரசம் கொட்டியவர்கள்"

"எனக்குப் புரிகிறது, சார்!"

இதற்குள் நெடுமாறனுக்கு கொடுக்கப்பட்ட நேரம் சரியானதற்கு அறிகுறியாக மணியடித்தது. உடனே அவர் எழுந்தார்.

"கடைசியாக ஏதாவது செய்தியுண்டா, ஆறுமுகம்?"

"சார்.........! அம்மாவிடம் என்னைப்பற்றிக் கூறுங்கள். கொஞ்சம் கூடப் பயமின்றி, தைரியமாகத் தூக்குமேடை ஏறியதாகக் கூறுங்கள்........."

"கட்டாயம் கூறுகிறேன், ஆறுமுகம்!"

இரண்டு வார்டர்கள் வந்து ஆறுமுகத்தை அழைத்துச் சென்றனர்.

அப்படியே ஸ்தம்பித்து நின்று கொண்டிருந்தார், நெடுமாறன். சரியானபடி பழக்கப்படுத்தப்பட்டால் ஆறுமுகம் எவ்வளவு நல்லவனாகிறான் என்றறிந்தபோது அவர் நெஞ்சு அடைத்துக் கொண்டது.

வாயிலைத் தாண்டிய ஆறுமுகம், "சார்...!" என்றான்.

"ஆறுமுகம்......!" என்றார் நெடுமாறன்.

"நல்லமுத்துவுக்கு என் வணக்கம் கூறுங்கள், சார்!

"சொல்கிறேன், ஆறுமுகம்!"

"நான் போகிறேன், என்னை மன்னித்துவிடுங்கள், சார்!"

நெடுமாறனுக்கு பதில்கூறமுடியவில்லை. தொண்டை அடைத்துக் கொண்டது. கண்களிலிருந்து இரு சொட்டுக் கண்ணீர் துளிகள் விழுந்தன.

ஆறுமுகம் ஒரு வரண்டசிரிப்புச் சிரித்தான். சில விநாடிகளின் அவன் உருவம் மறைந்தது!

முற்றும்

★

தெருக் கூத்து!

தமிழை, தமிழ்க்கலையை. எவ்வளவோ விதங்களில் கேவலப்படுத்தலாம். ஆனால் ராமகிருஷ்ண கிர்பா நாடகசபையார் சென்ற ஞாயிற்றுக் கிழமை "சிவகாமியின் சபதம்" என்ற தெருக்கூத்தின் மூலம் கேவலப் படுத்தியது மன்னிக்கமுடியாததாகும். சங்கீத நாடக அக்காடமி நடத்தும் "நாடகவிழா" விற்கு "சிவகாமியின் சபதம்" இங்கு நடத்திக் காட்டப்பட்டது. நாடகமாக அல்ல, தெருக்கூத்தாக! இத்தெருக் கூத்தைப்பார்க்கடிக்கட்டுகள் 10ரூ. 5.ரூ 3ரூ.!

ஆசிரியர் கல்கி எழுதிய ஒப்பற்ற சரித்திரக்கதை, ஆசிரியர் கல்கியின் நவீனங்களிலே முதல் இடம் பெற்றது "சிவகாமியின் சபதம்" இது தமிழ்நாட்டாருக்கு 'கல்கி'யின் பரிசு என்னலாம். 8-ம் நூற்றாண்டில் சாளுக்கிய பல்லவ மன்னர்களையும், அவர்களுக்குள் மூண்ட போரையும் அதோடு சிவகாமி என்ற நடனக் கள்ளியையும் பிணைத்து எழுதிய ஒப்பற்ற ஓவியம். அதில் குற்றமில்லை. அதை நடத்திய விதமே குற்றம்.

நாகநந்தியாக நடித்த டாக்டர் ராமமூர்த்தி ஒருவராலேயே நாடகமேநடந்ததுஎன்றால் மிகையில்லை. வேடப்பொருத்தம் இருந்தது: சரளமாகப் பேசினார்; நன்றாக நடித்தார். சிவகாமியாக நடித்த ராமமூர்த்தி, கண்ணனாகவும், மற்றும் சில்லரை வேடங்களில் வந்த ராமு, அய்யனாராக வந்த ரங்கப்பா, இவர்களைத் தவிர்த்து ஒருவருக்கும் நடிக்கவும் தெரியவில்லை. பேசவும் தெரியவில்லை.

பெண்கள் வேடத்தை ஆண்கள் நடிக்கும் வழக்கம் எப்பொழுதோ போய்விட்டது என்பது இச்சபை யாருக்குத் தெரியாது போலிருக்கிறது. நாடகத்தின் வெற்றி நடிகர்களின் பேச்சிலும் நடிப்பிலும்தான்; காட்சி சோடனைகளில் மட்டும் அல்ல என்பதும் இச்சபையாருக்குத் தெரியாதுபோலிருக்கிறது. காட்சி ஜோடனைகளில் கூட மேனாட்டு நாடகங்களில் எவ்வளவு முன்னேற்றம் உண்டாக்கியிருக்கிறார்கள்!

கம்பீரமாக இருக்கிறார்கள் என்றே இரண்டு மானிட "பொம்மை"களை முக்கிய பாத்திரங்களான மாமல்லச்சக்கரவர்த்திக்கும் தளபதிபரஞ்சோதிக்கும் வேடம் போட்டிருக்கிறார்கள், ஆனால் மகேந்திரவர்மனாக நடித்த டாக்டர் ராகவாச்சாரி தான் எனக்குப் பிடித்திருந்தார். பாவம் அவருக்குத் தமிழ் வராது போலிருக்கிறது. மருந்தைக் கண்ணைப் பிதுக்கிக் கொண்டு (இல்லை, மூடிக் கொண்டு!) குடிக்கும் சிறு பாலகனைப் போல் அவர் வசனங்களை மென்று விழுங்கிப்பேசியது பரிதாபகரமாயிருந்தது! ஆனால் கொட்டகையே அதிர்ந்து விடுவது போல் சிரிப்பதற்குக்காரணமாயிருந்தது பாண்டியராச குமாரத்திதான். மாமல்லன் வாதாபியை அழிக்கப் போகிறான்; மங்களமாகத் திரும்பி விடுவானும் கணவன் — அதற்குக் காரணம் கூறுகிறாள்: "என் நெற்றியில் மாங்கல்யமும் கழுத்தின் குங்குமமும் என்றென்றும் அழியாது" என்று. ஏன் சிரிக்கமாட்டார்கள்!

"தமிழ்நாடு"
4—12—54

★

பெண்கள் புரட்சி!

தங்கள் மனம் நாடியவர்களையே மணந்து கொள்ள உரிமைவேண்டுமென இந்தோனேஷியப் பெண்கள் வலியுறுத்துகிறார்கள். ஏன்? சமீபத்தில் ஒரு பெண்ணை அவளுடைய விருப்பத்துக்கு மாறாக அவளுக்கு மேல் 30 வயது அதிகமான ஒரு கிழவருக்கு மணமுடித்துவைத்ததால் வந்த வினை இது.

தென் சுமாத்ராவில் தஞ்சங்கிரட்ஜா என்னும் நகரில் மெய்சூரி என்ற 17 வயதுப் பெண் இருக்கிறாள். அவளை 45 வயதுள்ள கியாஜிக்கு மணமுடிக்க முற்பட்டனர் அவளது பெற்றோர்கள். அவளுக்கிஷ்டமில்லாததால் தன் விருப்பப்படி கோஜாம்என்ற அழகனை இரகசியமாக மணந்துகொண்டாள். அவளது பெற்றோர்களோ அவளுக்குத் தெரியாமலேயே அவளை கியாஜிக்கு ஒரு பேங்குலு (முஸ்லிம் மதகுரு) வின் முன்பு மணமுடித்து விட்டனர். நீதி மன்றத்தில் மெய்சூரி மீதும் கோஜாம் மீதும் வழக்குத் தொடரப்பட்டு, அவளுக்கு 6 மாத சிறையும், அவனுக்கும் சிறையும் அவர்கள் கலியாணத்தை நிறைவேற்றிய இன்னும் இருவருக்கும் சிறைத் தண்டனையும் அளிக்கப் பட்டது.

இதன் மீது மெய்சூரி வரைந்த பகிரங்கக் கடிதமொன்றை தென் சுமாத்ரா தலைநகரிலுள்ள பத்திரிகைகள் எல்லாம் பிரசுரித்தன. தன் கட்சிக்காதரவாக இந்தோனேஷியப்பெண்களனைவரையும் ஒன்று திரளுமாறு அதில் அவள் கோரிக் கொண்டிருக்கிறாள்.

பலம்பாங்முதலிய தென்சுமாத்ரா நகர்களின் பெண்கள் ஸ்தாபனத்தைச் சேர்ந்தசுமார் 1000பெண்கள் கொண்ட கூட்டமொன்று சுங்கை பினுங் கிராமத்தில் நடந்தது. நிர்ப்பந்தக் கலியாணத்தைத் தடை செய்யுமாறும், கலியாண சட்டங்களை ஜனநாயக முறையில் திருத்துமாறும், அரசாங்கத்திடம கோருவதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மெய்சூரி தம்பதிகள் விடுதலை செய்யப்பட வேண்டுமென்று மற்றொரு தீர்மானம் கோரியது.

(நூருல் இஸ்லாம்)

கர்நாடக திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாடு

வருகிற டிசம்பர் 18, 19 சனி ஞாயிறுகளில் பெங்களூரில்

கண்டோண்மென்ட் மைதானத்தில் மஜீத் பந்தலில் நடைபெறும்

சனி 18—12—54	ஞாயிறு 19—12—54
சமுதாய சீர்திருத்த மாநாடு	அரசியல் மாநாடு
தலைவர்:	தலைவர்
காஞ்சி கலியாணசுந்தரம்	**என். வி. நடராசன்**
திறப்பாளர்:	திற
ப. உ. சண்முகம்	**திருமதி அருண்மொழி** B. O. L.

இரண்டு நாட்களிலும் பொதுச் செயலாளர் அண்ணுதுரை, இரா. நெடுஞ்செழியன், ஈ. வே. கி. சம்பத், கே. எ. மதியழகன், க. அன்பழகன், மு. கருணுநிதி, சி. பி. சிற்றரசு, அ. பொன்னம்பலனுர், கே. ஆர். ராமசாமி, எஸ். எஸ். இராஜேந்திரன் ஆகியோர் கலந்துகொள்வர்.

இசை முரசு நாகூர் அனிபா குழுவினர் இசை விருந்து வழங்குவர்.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் குழுவினருடன் "நான் கண்ட ரஷ்யா" வில்லுப்பாட்டு நடைபெறும்.

மாநாட்டுக் கட்டணம் (இரு நாட்களுக்கும்)

வரவேற்பாளர் ரூ 3, பிரதிநிதி ரூ 2, பார்வையாளர் ரூ 1, பெண்கள் அணு 8.

Edited, Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St, Kancheepuram.